திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி : 8 | ஜூன் - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# எந்த நூல் தேவை?

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

எத்தனையோ மலர்வகைகள் சிரித்திட் டாலும்
எழில்முல்லை மல்லிகையை மகளிர் மொய்ப்பார்!
புத்தகங்கள் எத்தனையோ பூத்த போதும்,
பொருளழகுப் படைப்புகளே நமக்குத் தேவை!
இத்தரைமேல் எத்தனைநாள் நந்தம் ஆயுள்?
எல்லாமே சுவைப்பதற்கு நேரம் எங்கே?
முத்துள்ள சிப்பிகளை நாடித் தேடி
மும்முரமாய்த் திரட்டுவதே திறமை என்பேன்!

வரலாற்றைப் படியுங்கள்; பாடம் பெற்று
வரலாற்றைப் படையுங்கள்! ஆற்ற லாலே
விரல்நுனியில் வையகத்தைக் கட்டிப் போட்ட
வித்தகர்கள் அடிச்சுவட் டைப்பின் பற்றுங்கள்!
உருப்படியாய்த் திட்டமிட்டு வளங்கு வித்தே
ஓங்கிநிற்கும் நாடுகளின் வெற்றிப் பாதைச்
சரித்திரத்தின் திருப்பமெல்லாம் அறிந்தால் அன்றித்
தரித்திரத்தைத் துரத்துவதும் இயல்வ தெங்கே?

பாவியலின் நூல்களையே பயின்றால், இல்லம்
பள்ளியென மாறாதா? சோதி டத்து
நூல்தோய்ந்து விதிவழி தான் வலிதே என்றால்,
நூலிழையும் முன்னேற்றம் ஏது? மாயா
சாலத்தை மந்திரத்தைப் புகட்டும் நூலால்
தழைத்திடுமா நம்வாழ்வு? எனவே நாமும்
காலத்தின் அருமையினை நெஞ்சில் ஏந்திக்
கருத்தாழ நூல்களிலே மூழ்க வேண்டும்!

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 8
ஜூன் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

இதழ்மணம் 3

மகா வித்துவான் அரசஞ் சண்முகனார் 4
முனைவர் ச.சாம்பசிவனார்

திருக்குறளில் ழகரம் — க.தண்டபாணி 7

தக்கயாகப்பரணி — வி.நாகசுந்தரம் 9

மொழித் திறன்களில் பள்ளியின் பங்கு 22
முனைவர் க.குழந்தைவேல் பன்னீர் செல்வம்

அறிவுக்கு விருந்தாகும் பெரும்புள்ளிகள் 28
பேரா. நெல்லை ந.சொக்கலிங்கம்

# இதழ்மணம்

நான்காம் சங்கப் பலகையாகத் திகழும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு வைத்திருந்த மகாவித்வான் அரசஞ் சண்முகனார் இலக்கணம், நிகண்டு, இலக்கியங்கள், தருக்கம், சோதிடம் ஆகியவற்றை முறையாகக்கற்று தமிழுக்கும் தமிழ்ச் சங்கத்திற்கும் ஆற்றிய பணி அரிது. இப்பெருமகனாரின் தமிழ்ப்பணியை முனைவர் ச. சாம்பசிவனார் விளக்கியிருப்பது ஆய்வாளருக்கு நல்ல வழிகாட்டியாக உள்ளது.

உலக மொழிகளில் இல்லாத ழகரம் தமிழில் சிறப்பு ழகரம் என்று அழைக்கப்படுவதையும், இவ் ழகரம் திருக்குறளில் வரும் இடத்தைப் பட்டியலிட்டு திரு. க. தண்டபாணி தமது கட்டுரையில் காட்டியிருப்பது தமிழுக்கு ஆற்றிய சிறப்பு.

திரு. நாகசுந்தரம் அவர்களின் தக்கயாகப்பரணி என்னும் கட்டுரை பரணி இலக்கியத்தின் இலக்கணத்தையும், இவ்விலக்கியம் படைத்த ஒட்டக்கூத்தரின் வரலாற்றினையும், தக்கயாகப்பரணியின் பெயர்க்காரணத்தையும், தக்கன் செய்த யாகத்தையும் புராணச்செய்தியுடன் விளக்கியிருப்பது சிறப்பு.

மனிதன் தன்னுடைய சக மனிதனுக்கு தனது கருத்தினைப் புலப்படுத்த மொழி அவசியம். இம்மொழி பேச்சு ஒலியில் மட்டும் இல்லாமல் உடல் அசைவுகளாலும் வெளிப்படுத்த முடியும் என்பதையும், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய முறைகளைப் பற்றி மொழித் திறன்களில் பள்ளியின் பங்கு எனனும் கட்டுரையில் முனைவர். சு. குழந்தைவேல் பன்னீர் செல்வம் குறிப்பிட்டிருப்பது மாணவர்களுக்கு கற்றல் திறனை வளர்ப்பதாய் இருக்கிறது.

பேரா. நெல்லை ஞ. சொக்கலிங்கம் அவர்களின் அறிவுக்கு விருந்தாகும் பெரும்புள்ளிகள் என்னும் கட்டுரை. உண்மையிலேயே தமிழகத்தில் வாழ்ந்த வரலாற்றுப் புள்ளிகளைச் சான்றுகளுடன் விளக்குவதோடு அடுத்த இதழிலும் தொடர்வதாய் இருக்கின்றது. கவிவேந்தர். கா. வேழவேந்தன் என்பவரது மரபுக்கவிதை நல்ல நூல் தேர்வைக் குறிப்பிடுவதாய் அமைகிறது.

முனைவர்.க.சின்னப்பா

# மகா வித்துவான் அரசஞ் சண்முகனார்



முனைவர் ச.சாம்பசிவனார்

1902–ஆம் ஆண்டில் ஒரு நாள். பள்ளித் தலைமையாசிரியர் மாணவர்க்குரிய பாட அட்டவணையில் ஆங்கிலப்பாட நேரத்தைக் கூட்டித் தமிழ்ப்பாட நேரத்தைக் குறைத்திருந்தார். அங்கு வேலை பார்த்த தலைமைத் தமிழாசிரியர், "திடுமென இம்மாற்றம் ஏன்? இப்பாட அட்டவணையைத் திருத்தித் தமிழுக்கு உரிய பாட நேரத்தை ஒதுக்கித்தர வேண்டும்" என்று கேட்டார். அதற்குத் தலைமையாசிரியரோ சற்றும் கவலை ஏதுமின்றி, புன்சிரிப்புடன், திருத்த இயலாது; தமிழ்தானே! அதனால் பயன் என்ன? என்று மறுத்துவிட்டார்.

"தமிழ்தானே!" யாரோ ஒருவர் தம் முதுகில் சாட்டையடி கொடுப்பது போல் தோன்றியது அத்தமிழாசிரியருக்கு. 'திருத்த வாய்ப்பில்லை' என்று சொல்லியிருந்தால்கூட தமிழாசிரியர் 'சரி' என்று போயிருப்பார்.

"தமிழ் மண்ணிலே பிறந்து, தமிழ்க் காற்றினையே சுவாசித்து, தமிழ்நாட்டு உணவினையே சாப்பிட்டு, தமிழ் மண்ணிலே உயிர்விடப் போகும் ஒரு தமிழ் மகன், தம் தாயினும் சிறந்த தமிழ்மொழியின் பெருமை உணராமல் 'தமிழ் தானே' என்று கூறிய நெஞ்சழுத்தந்தான் என்னே!" என்று உள்ளம் கொதித்து, அன்றே வேலையில் இருந்து விலகிக்கொள்வதாக எழுதிக் கொடுத்துவிட்டு, பள்ளியை விட்டு வெளியேறினார். 'தமிழ்தானே!' என்ற சொற்கள் அவர் உள்ளத்தே ஆழப்பதிந்துவிட்டன. அதனால் அவர் எழுதிய நூல் ஒன்றில், "உலகத்து வழங்கும் மொழிகள் பலவற்றினும் சிறந்து, பண்டைகாலந்தொட்டே அண்டரு முனிவரும் கொண்டாடப்பெற்று வழங்குவது நமது தண்டமிழ் மொழியே" எனத் தேற்றேகாரமிட்டுத் தமிழின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கினார். ஆம்! அவர்தாம் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார்.

எளிய உருவத்தினர்; பிறர்க்குதவும் பெற்றியர்; செய்ந்நன்றி மறவாச் சிந்தையினர்; செந்தமிழ்க் கடலின் நிலைகண்டவர்;

இலக்கணக்கடல் எனப் பல்லோராலும் போற்றப்படுபவர்! 20ஆம் நூற்றாண்டின் இணையில்லாப் பெரும்புலவர்; பெருமையும் பீடுங் கொண்ட உரையாசிரியர் அரசஞ் சண்முகனார்.

மதுரையை அடுத்த சோழவந்தானில் அரசப்பபிள்ளை–பார்வதி அம்மையாரின் அருமை மகனாக 1868–ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்தார். அவ்வூர்த் திண்ணைப்பள்ளியில் கல்வி கற்றார். எழுத்திலக்கணம், நிகண்டு, அந்தாதி ஆகியன கற்றுத் தேர்ந்தார். பின்னர், சிவப்பிரகாச சுவாமிகளிடம் சங்க நூல்கள், இலக்கண, இலக்கியங்கள், தருக்கம், ஜோதிடம் ஆகியன கற்றுப் புலமை பெற்றார்.

அவர் தமது இளமையிலேயே தந்தையை இழந்தார். தம் பதினெட்டாம் வயதில் 'மாலை மாற்று மாலை' என்ற நூலைப் பாடி முடித்தார். இளமையிலேயே தந்தையை இழந்ததால் குடும்பப் பொறுப்பை ஏற்கும் நிலையில் காளியம்மை என்னும் மங்கை நல்லாளை மணமுடித்தார். இல்லற வாழ்வு ஏற்ற சில காலத்திற்குள்ளாகவே, ஆசிரியப் பணி கிடைத்தது. மதுரைச் சேதுபதி உயர்பள்ளியில் பணி புரியலானார். இவர்பால் தமிழ் பயின்றோர் பிற்காலத்தில் நாட்டுரிமைக்காகப் போராடியவர்கள் என்பது குறிப்பிடத்தகும். அவ்வகையில் மட்டப்பாறை வெங்கட்ராமையர், வைத்திய நாதையர் போன்றோரைக் குறிக்கலாம். சண்முகனார் இப்பள்ளியில் பன்னிரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போது நடந்த நிகழ்ச்சிதான் தொடக்கத்தில் குறிப்பிட்ட 'தமிழ்தானே நிகழ்ச்சி'.

சண்முகனாரின் தோற்றம், நாட்டுப் புறங்களில் வேலை செய்யும் உழவனை நினைவுபடுத்தும். உடம்பை மறைக்க நான்குமுழம் வேட்டி; மேலே ஒரு துண்டு; தலையிலே சிறு குடுமி; வெற்றிலைக் காவி படிந்த மீசை; அடிக்கடி நோயினால் மெலிந்து காணப்படும் உடம்பு; இறைவனை என்றும் நினைவுபடுத்தும் நீறு. இவர்தம் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்துவிட்டு 'இவர்பால் அணுகவும் இயலாதே' என அஞ்சி ஒதுங்கி இருப்பவரெல்லாம், உருவத்தை நேரில் கண்டால் அவர்தாமா என்று எண்ணுமளவிற்குத் தம் புலமைத் திறத்தை வெளிக்காட்டாமல் அடங்கியிருந்தவர் சண்முகனார். இத்தகையாளரைப் புலவர் குழாத்திடை இருக்கச் செய்த பெருமை, வள்ளல் பாண்டித்துரைத்தேவருக்குரியது.

மதுரைத் தமிழ்ச்சங்கம், 1901 செப்டம்பர் 14–இல் தொடங்கப்பட்டது. அதன் பயனாய்ச் சேதுபதி செந்தமிழ்க்

கலாசாலை உருவாயிற்று. நாராயணையங்கார், ரா.இராகவையங்கார் ஆகியோர் முறையே கலாசாலைத் தலைவராகவும் நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைத்தலைவராகவும் அமர்த்தப்பட்டனர். அந்தக் கலாசாலையில் 1902 முதல் 1906 வரை அரசஞ் சண்முகனார் ஆசிரியர் பணியில் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

மதுரைத்தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலம் முதல் இறுதிக்காலம் வரை அதனுடன் தொடர்பு கொண்டிருந்தால், உ.வே.சா, மறைமலையடிகள், மு.இராகவையங்கார், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், ரா.இராகவையங்கார், மு.ரா.அருணாசலக் கவிராயர் ஆகிய பலரிடம் நட்பு கொண்டிருந்தார்.

தமிழ்க்கடலின் மரக்கலமாகிய தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றின் துணைகொண்டு தமிழாகிய அமிழ்தக்கடலில் மூழ்கி அரிய முத்துக்களாகிய ஆழ்ந்த பொருள்களைத் தேடிக்கொணர்ந்து தமிழ் உலகிற்கு உவந்தளித்தார். அத்தகைய முத்துகளே தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறளாராய்ச்சி, திருக்குறட் சண்முகவிருத்தி ஆகியன. இவை தவிர இவர் எழுதிய நூல்களாவன; சோழவந்தான் சிதம்பர விநாயகர் மாலை, மாலை மாற்று மாலை, ஏகபாத நூற்றந்தாதி, இன்னிசை இருநூறு, மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை, திருவடிப்பத்து, நவமணிக்காரிகை நிகண்டு, வள்ளுவர் நேரிசை, இசை நுணுக்கச் சிற்றுரை எனப் பலவாகும்.

தமிழ்ப்பற்றும் தமிழறிவும் குறைந்திருந்த காலத்தில் தமிழுக்காகப் புத்துயிர் கொடுத்த பெருமை மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றுக்கே உண்டு. கரந்தைத் தமிழ்ச்சங்கத் தோற்றத்துக்கு அரசஞ் சண்முகனாரும் ஒருவகையில் துணை நின்றவர் எனலாம்.

சண்முகனார் வாழ்வில் பெரும்பகுதி உரைமறுப்பாகவே கழிந்தது எனலாம். சான்றுக்கு, தொல்காப்பிய பாயிர விருத்தி, அறிஞர் பெருமக்களிடையே பெரும் கருத்து மோதல்களை உண்டாக்கியது. மாதவச் சிவஞான சுவாமிகளை ஏறத்தாழ முப்பது இடங்களில் மறுத்துரைக்கிறார். அரசஞ் சண்முகனார். இவ்வாறு சண்முகனார் வாழ்வில பெரும்பகுதி உரைமறுப்பில் கழிந்தது. இத்தகு பெரும்புலவர் தம் 47ஆம் வயதில் 1915ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். எனினும் அவருடைய ஆராய்ச்சியாலும் தொண்டினாலும் என்றும் வாழ்வார் என்பது உறுதி.

நன்றி : தினமணி—தமிழ்மணி (26.04.09)

# திருக்குறளில் ழகரம்

க.தண்டபாணி
வீரசோழபுரம்.

செந்தமிழ் மொழியில் ழகரம் ஒன்றே சிறப்பெழுத்து என்ற பெருமை பெற்றுள்ளது. இவ்வெழுத்து வேறு எந்த மொழியிலும் இல்லாத காரணத்தால் இது மட்டுமல்லாமல் தமிழ் மொழியும் பெருமை பெற்றுள்ளது.

மேல் வாயை (அண்ணத்தை) நா நுனி தடவ ழகரம் பிறக்கும் என்ற நன்னூல் 83ஆம் நூற்பா நவில்கிறது.

'அண்ணம் நுனிநா வருட ரழவரும்'

இஃது அந்நூற்பாவாம். இவ்வாறு ழகரத்தை ஒலிப்பது அரிதேயாயினும் அறிந்தவர்க்கு மிக எளிதாம்.

திருக்குறளில் 500க்கும் மேற்பட்ட ழகர வர்க்க எழுத்துக்கள் அமைந்துள்ளன. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் உள்ள பத்து குறட்பாக்களிலும் ழகர வர்க்க எழுத்துகள் அமைந்துள்ளன. இவ்வதிகாரத்தின் பெயரிலும் ழகர வர்க்க எழுத்து (ழு) அமைந்துள்ளது. ஒழுக்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தவே திருவள்ளுவர் இவ்வதிகாரத்தில் மட்டும் அனைத்துக் குறட்பாக்களிலும் ழகர வர்க்க எழுத்துகளை அமைத்துள்ளார்.

திருக்குறளில் ஏழு அதிகாரங்களில் உள்ள எழுபது குறட்பாக்களிலும் ழகர வர்க்க எழுத்துக்களே இல்லை. அவ்வேழு அதிகாரங்களைக் காண்போம்.

1. பயனில சொல்லாமை (20)
2. துறவு (35)
3. குறிப்பறிதல் (71)
4. அவை அஞ்சாமை (73)

5. நல்குரவு (105)

6. குறிப்பறிதல் (110)

7. பசப்புறு பருவரல் (119)

இவ்வேழு அதிகாரங்களின் பெயர்களிலும் கூட ழகர வர்க்க எழுத்துகள் அமையவில்லை என்பது உளங்கொளத்தக்கது. மற்ற அதிகாரங்களில் சில குறட்பாக்களில் ழகர வர்க்க எழுத்துக்கள் உள்ளன. சில குறட்பாக்களில் ழகர வர்க்க எழுத்துக்கள் இல்லை.

133 அதிகாரங்களுள் 21 அதிகாரங்களின் பெயர்களில் ழகர வர்க்க எழுத்துக்கள் அமைந்துள்ளன. மற்ற 112 அதிகாரங்களில் ழகர வர்க்க எழுத்துக்கள் இல்லை. இவற்றை திருக்குறளில் கண்டு கொள்க.

ஊழியல், ஒழிபியல் தவிர வேறு இயல்களில் ழகர வர்க்க எழுத்துக்கள் அமையவில்லை.

நான்கு ழகர வர்க்க எழுத்துக்கள் அமைந்துள்ள ஒரு குறட்பாவைக் காண்போம்.

**வீழப் படுவார் கெழீஇயலர் தாம்வீழ்வார்**
**வீழப் படாஅர் எனின்.** – (குறள் : 1194)

தமிழால் தமிழரும் தமிழரால் தமிழும் செழிப்பது போல ழகரத்தால் தமிழும் தமிழால் ழகரமும் செழிப்புறுகின்றன.

# தக்கயாகப்பரணி

வி.நாகசுந்தரம்,
சென்னை

**"இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்**
**விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"**

*- தமிழ் விடு தூது!*



படம் 1 : கலை மகள்
படம் 2 : கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

'பண்டைத் தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சி முடிவுற்ற பின்னர், முகலாய - மாலிக்காபூரின் படையெடுப்பு நடந்தது. இசுலாமியப் படையெடுப்பையும், ஆட்சியையும் தடுத்து நிறுத்த விசய நகரப் பேரரசு தோன்றியது. மதுரையில் நாயக்கர் ஆட்சியும், தஞ்சைப் பகுதியில் மராட்டியர் ஆட்சியும் தோன்றின. இக்கால கட்டத்தில், தோன்றிய ஜமீன்தார்களும், சிற்றரசர்களும், நாயக்க, மராட்டிய மன்னர்களும் ஆண்டபொழுது தோன்றிய புலவர்கள், அன்றைய சமுதாயச் சூழ்நிலையின் காரணமாக சிற்றிலக்கியங்களையே படைத்தனர். அவ்வகையில் எழுந்தவையே 96 வகைச் சிற்றிலக்கியங்கள். உண்மையில் சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குச் சங்க இலக்கியங்களே வழிகோலின எனலாம். ஆயினும் காலவேறுபாட்டால் இவ்விலக்கியங்கள் சங்க இலக்கியங்களிலிருந்து வேறுபட்டே அமைந்துள்ளன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சிற்றிலக்கியம், நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பெரு வளர்ச்சி பெற்றது. எனவே நாயக்கர் ஆட்சிக் காலத்தை 'சிற்றிலக்கியக்காலம்' என இலக்கிய வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர்.

**'விருந்தே தானும்**
**புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"**

என்ற தொல்காப்பிய நூற்பா வனப்புகளில் ஒன்று 'விருந்து' என்று கூறுவதுடன் புதுவது புனைதலாக வரும் படைப்புக்களையும் வரவேற்கிறது. மேலும் "ஊரொடு தோற்றமும் உரித்தன மொழிப" என்பது உலா இலக்கியத்தையும், "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்பது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தையும் சுட்டுவதாகக் கொள்வர்.

ஆற்றுப்படை இலக்கிய வகையின் நோக்கத்தையும், அதில் அமையும் ஒருமை, பன்மை மயக்கத்தையும் தொல்காப்பியம் (107, 945) சுட்டிச் செல்லும்.

**முனைவர். நா.வி.செயராமன்**

"தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கியவித்து, சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, 5ஆம் நூற்றாண்டில் அந்தாதியாகத்துளிர்த்து, 7ஆம் நூற்றாண்டில் கோவை என்ற செடியாகி, 9ஆம் நூற்றாண்டில் சதகமாக அரும்பி, 12ஆம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழாக, மொட்டாகி, 17ஆம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, 16ஆம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, 18ஆம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது" என்று அழகுபட சிற்றிலக்கிய வளர்ச்சி பற்றிக் கூறுவார்.

பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல் போன்ற நூல்கள் சிற்றிலக்கியம் பற்றி விரிவாகப்பேசினாலும், இச்சிற்றிலக்கியங்கள் 96வகை என்பது குறித்து இந்நூல்களுள் ஒன்று கூட விளக்கவில்லை. முதன்முதலாக பிரபந்த மரபியல்தான்,

> **"பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத்**
> **தொண்ணூற்றாறு என்னும் தொகையாம்"** என்கிறது.

இத்தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் முதன்மையாகக் கருதப்படுபவை; ஆற்றுப்படை, அந்தாதி, மாலை, பத்து, கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி, என்ற பதினான்கு வகைகளே. கோவை, மடல், கைக்கிளை, தூது போன்றவை அகப்பாடல்கள், காஞ்சி, மாலை, கையறுநிலை போன்றவைப் புறப்பாடல்கள். கும்மி, பள்ளு, சிந்து, குறவஞ்சி போன்றவை நாட்டுப்புற வகைகள்.

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள் என்று கூறினாலும், பன்னிரு பாட்டியல் 62 இலக்கிய வகைகள் பற்றியும் வெண்பாப்பாட்டியல் 55 வகைபற்றியும், நவநீதப் பாட்டியல் 45 வகைப் பற்றியும், சிதம்பரப் பாட்டியல் 59 வகைபற்றியும், இலக்கண விளக்கப்பாட்டியல் 64 வகை பற்றியும், முத்துவீரியப்பாட்டியல் 90 வகை பற்றியும், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை, சதுரகராதி, தொண்ணூல் விளக்கம் போன்றவை 96 இலக்கிய வகைகள்

பற்றியும் கூறுகின்றன. வீரமாமுனிவர் 'பிரபந்தம்' செய்யப்படுவது என்று கொண்டு காப்பியத்தையும் இத்தொகுதியில் சேர்த்துள்ளார். மொத்தத்தையும் இணைத்துப் பார்க்கும்பொழுது 201 வகைகள் உள்ளன. மேலும் இப்பொழுது பயிற்சியிலுள்ள 160 சிற்றிலக்கியங்களின் பட்டியல் இடுவார் முனைவர். ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் தனது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில்.

**பரணி இலக்கியம்**

*"ஆனை ஆயிரம் அமரிடை வென்ற*
*மானவனுக்கு வகுப்பது பரணி".*

என்பது இலக்கண விளக்கம்.

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொல்லும் வீரனைச் சிறப்பித்துப் பாடுவது பரணியாகும். மேலும் போர்புரியும் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கப் பாடப்பட்டது என்றும் கூறலாம். பரணி என்பது ஒரு விண்மீனின் பெயர். போர்க்குரிய தெய்வமாகிய கொற்றவைக்குரிய நாள் பரணி. எனவே போரில் வெற்றி பெற்ற வேந்தன், பரணி நாளில், கொற்றவைக்கும் கூழ்இட்டு படைத்துக் கொண்டாடுவது மரபு. போரில் வென்றவனைச் சிறப்பிப்பது 'பரணி இலக்கியம்' என்றாலும் தோற்றவனைச் சார்ந்தே நூலுக்குப் பெயரிடுவது மரபு. (எ.கா.) கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி முதலியன.

பரணியின் .இலக்கணத்தை வச்சணந்திமாலை,

*"மூண்ட அமர்க்களத்து மூரிக் களிறிட்ட*
*ஆண்டகை யைப் பரணி ஆய்ந்துரைக்க ஈண்டிய*
*நேரடியே யாதியா நீண்ட கலித்தாழிசை*
*ஈரடி கொண் டாதியுடன் ஈறு"* என்று குறிப்பிடும்.

மேலே கூறியுள்ள இலக்கண விளக்கத்தில் குறிப்பிட்டது போல் 'களிறு' எத்தனை என்பதை வரையறுக்கவில்லை. பரணி நூல்களில் பல இடங்களில் யானைப் போரைக் குறிக்கும் சொல்லாகப் பரணி கூறப்பட்டுள்ளதால், யானைப் போர் ஒழிந்த ஏனையப் போரைப் பற்றிப் பாடுவது 'பரணி' ஆகாது என்கிறது பன்னிரு பாட்டியல்.

*"யானைசாய்ந்த அடுகளத்தல்லது*
*யவரும் பெறாஅர் பரணி பாட்டே"*

பொதுவாகப் பரணி இலக்கியம், கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, வாழ்த்து முதலிய உறுப்புக்கள் கொண்டது. ஆயினும் ஒவ்வொரு பரணி நூலிலும் இவ்வுறுப்புக்கள் முறை மாறிமாறி வேறு வகையில் வருதலும் உண்டு.

தக்கயாகப் பரணியில் இவ்வுறுப்புக்கள், காப்பு, கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, கோயிலைப்பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, கூழ் அடுதலும், இடுதலும், களம் காட்டல், வாழ்த்து என்ற அமைப்பில் உள்ளன.

'பரணிநூல்கள்' செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியும், ஒட்டக்கூத்தரின் தக்கயாகப் பரணியும், ஆசிரியர் பெயர் தெரியாத இரணியவதைப் பரணியும், தத்துவராயரின் அஞ்ஞவதைப் பரணியும், மோகவதைப் பரணியும், வைத்தியநாத தேசிகரின் பாசவதைப் பரணியும், சீனிப்புலவரின் திருச்செந்தூர்ப் பரணியும் படித்துச் சுவைத்து இன்புறத்தக்கன. பதினேழு பரணிகள் பற்றிய செய்திகள் கிடைப்பதாகக் கூறுவார் முனைவர் செயராமன் அவர்கள். கலிங்கத்துப்பரணியைப் பரணி நூல்களில் காலத்தால் முந்திய நூல் என்பர். ஆனால் அதற்கு முன்னர் மூன்று பரணி நூல்கள் தோன்றியுள்ளன. இரண்டாம் இராசேந்திரரின் புகழ்பாடும் கொப்பத்துப்பரணி (கி.பி. 1054), வீர இராசேந்திரரின் புகழ்பாடும் கூடல் சங்கமத்துப்பரணி (கி.பி.1064), ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரமசோழன் புகழ்பாடும் கலிங்கப்பரணி (கி.பி.1096) இம்மூன்று நூல்களும் இப்பொழுது கிடைக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க செய்தி.

**ஒட்டக்கூத்தர் வரலாறு**

> ***"சென்று செவியளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே***
> ***நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று***
> ***மலர்இவரும் கூந்தனார் மாதர்நோக்கு, ஒன்று***
> ***மலரிவரும் கூத்தன்தன் வாக்கு."***

தண்டியலங்கார உரை மேற்கோள்.

கி.பி.11, 12, ஆம் நூற்றாண்டுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் எனலாம்.

இக்கால கட்டத்தில்தான் மாபெரும் கவிஞர்களான சேக்கிழார்பெருமான், கம்பர், செயங்கொண்டார், பிற்கால அவ்வையார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் தோன்றி தமிழன்னைக்குத் தங்களது புலமைத்திறத்தால் தமிழ் உலகம் உள்ளளவும் இறவாப் புகழ் பெற்ற இலக்கியச் செல்வங்களை யாத்து அணி செய்தனர். கம்பர், செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் ஆகியோர் "கவிப்பேரரசர்கள்" எனப் புகழப்பட்டனர்.

மேலும் சங்க காலம் தொட்டே புலவர்கள் புரவலர்களாகிய வேந்தர்களுடன் நெருங்கிப் பழகி வந்ததையும் காண்கிறோம். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் மாங்குடி மருதனாரும், பாரியிடம் கபிலரும், அதியமானிடம் அவ்வையாரும் கூடவே இருக்கின்ற சிறப்பைப் பெற்றது போலவே, முதற்குலோத்துங்கனிடம் செயங்கொண்டாரும், மூன்றாம் குலோத்துங்கனிடம் சேக்கிழார் பெருமானும், மூன்று சோழவேந்தர்களாய அப்பா, மகன், பெயரன் என விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூவரிடமும் அரசவைப் புலவராக வீற்றிருக்கும் சிறப்பைப் பெற்றவர் ஒட்டக்கூத்தர் மட்டுமே. வேறு எந்தப்புலவருக்கும் எந்தக் கால கட்டத்திலும், இவ்வாறு மூன்று தலைமுறை வேந்தர்களின் அவைகளப்புலவராக இருக்கும் பேறு கிட்டவில்லை.

ஒட்டக்கூத்தர் சோழவள நாட்டிலுள்ள மலரி என்னும் ஊரில் தோன்றியவர் என்பர். இதனைத் தண்டியலங்கார மேற்கோள் வெண்பாவில் வரும் 'மலரி வரும் கூத்தன்தன் வாக்கு' என்பதனால் அறியலாம். எனினும் "மணவை வரும் கூத்தன் தன்வாக்கு" என்று சில கையேட்டுப் படிகளில் உள்ளதால், "திருவாய்மூர்" அருகிலுள்ள மணக்குடியே இவரது பிறப்பிடம் எனக் கூறுவாரும் உண்டு. இவரின் தந்தையார் 'சிவசங்கர பூபதி' தாயார் 'வண்டமர் பூங்குழலி' என்றும் கூறுவர். 'அம்பலக்கூத்தன்' என முதலில் வழங்கி வந்த பெயர், பின்னர் கூத்தன் என்ற பெயரே நிலைத்துவிட்டது. ஒட்டக்கூத்தர் 'செங்குந்தர்' குடியைச் சேர்ந்தவர்.

**ஒட்டக்கூத்தர் பெயர்க்காரணம்**

கூத்தபெருமானின் பெயருடன் "ஒட்டம்" என்ற சொல் இணைந்திருப்பது தனிக்கதையாகும். ஒட்டும், ஒட்டுதல் எனப்

பொருள்தரும். 'ஈட்டி எழுபது' என்ற நூலைச் செய்த பொழுது கலைமகளை வழிபட்டுப் புலவர் பாடிய அருட்கவிகளால் வெட்டப்பட்ட தலைகள் யாவும் உடம்புகளோடு ஒட்டி உயிர்பெற்று எழுந்ததாகக் கூறுவர். 'பந்தயம்' வைத்துப் பிற புலவர்களை வென்று வாகை சூட்டியமையாலும் இவர் இப்பெயர் பெற்றார் என்பர். இவைபோன்ற கட்டுக்கதைகளை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் 'ஒட்டக்கூத்தர்' என்ற பெயர் குறித்து முனைவர் மு.வ. அவர்கள் கூறியிருக்கும் கருத்து அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றே. " 'கூத்தர்' என்பது நடனமாடும் கடவுளாகிய சிவபெருமானுடைய பெயர். அவர் 'ஓரிசா' நாட்டோடு பெற்றிருந்த தொடர்பு காரணமாக ஒட்ட (ஓரிசா நாட்டு) என்ற அடையுடன் 'ஒட்டக்கூத்தர்' என அழைக்கப்பெற்றார். இச்சொல்லை (ஒட்டக்கூத்தர்) விளக்குவதற்காக வேறுவகையில் காரணம் கற்பிக்கப்பட்டுக் கதை புனையப்பட்டதும் உண்டு". ஒட்டக்கூத்தர் சோழமன்னர்களின் அவைக்களப்புலவராகவும், அவர்களது ஆசானாகவும் விளங்கினார். சோழவேந்தர்கள் புலவர் பெருமானுக்கு வரிசைகளும், பரிசுகளும் வழங்கினர். இறையிலியாக இவருக்குக் 'கூத்தனூர்' என்னும் ஊரையே வழங்கினர். இவ்வூர் 'பூந்தோட்டம்' தொடர்வண்டி நிலையத்துக்கு அருகில் உள்ளது. கி.பி. 1118 முதல் கி.பி. 1163 வரை, ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கும் மேலாகச் சோழ மாமன்னர்களின் அரசவையை அலங்கரித்தார். கூத்தனூரில் கூத்தர் தாமே அமைத்த ஆற்றங்கரைச் "சொற்கிழத்தி" (கலைமகள்) கோயில் இன்றும் நன்னிலையிலேயே உள்ளது. புலவர் பெருமான் சைவசமயத்தின் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். அவர் பாடியருளிய 'தக்கயாகப் பரணி ஒன்றே போதும் அவரது சமயப் பற்றுக்குச் சான்று கூற, சிவபெருமானை மதிக்காது, திருமால் முதலிய பிற தேவர்களை அழைத்து வேள்வி செய்த தக்கன் தலையைக் கொய்ததுடன், திருமால் தவிர அனைத்துத் தேவர்களையும் வென்ற வரலாற்றைக் கூறுவது தக்கயாகப் பரணி'. இந்நூல் ஒரே நாள் இரவில் பாடப்பட்டது என்று ஒரு வரலாறும் உண்டு.

**தக்கயாகப் பரணி பிறந்த சூழல் (ஒட்டக்கூத்தர் வரலாறு)**

கும்பகோணம் மகாமகக் குளத்தின் வடகரையில் வீரசிங்காதன பீடம் என வழங்கும் பெரிய மடமும், அதனைச் சார்ந்த

வீரபத்திரர் திருக்கோயிலும் உண்டு. அம்மடத்தில் தவயோகிகள் பலர் இருந்தனர். ஒரு நாள் ஒரு துறவி திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு பிச்சைக்குச் சென்றார். கூத்தர் பெருமானின் வீட்டின் முன் நின்று "கல்லால் நிழற் கீழாய் காவாய்" என்று தொடங்கும் பதிகத்தை இசையுடன் பாடினார். அதனைக் கேட்ட கூத்தர் பெருமாள் துறவி, தான் பாடும் பாட்டின் பொருளறியாது பாடுகின்றார் என நினைத்தார். கூத்தபிரான் துறவியிடம் அவர் பாடும் பாட்டின் பொருள் என்ன எனவினவினார். உண்மையில் துறவிக்குப் பாட்டின் பொருள் தெரியாது. ஆனால் அதனை மறைத்துக் கூத்த பிரானிடம் "ஞான சம்பந்தரின் பாட்டுக்கு எல்லோரும் பொருள் கூறமுடியுமா? உமக்குத் தெரிந்தால் கூறும் எனறார்". இதனைக் கேட்ட கூத்தர் மிகவும் சினங்கொண்டு தம் கையில் இருந்த பிரம்பால் அந்தத் துறவியை அடிக்க, வினைப் பயனால் அவர் கீழே விழுந்து இறந்தார். இச்செய்தி மடத்திற்குத் தெரிந்ததும் அம்மடத்தைச் சேர்ந்த துறவிகள் புலவரின் இல்லத்திற்குச் சினத்துடன் சென்றனர். இதனை அறிந்த புலவர் பிறர் தம்மைக் காணுமுன்னர் அரண்மனையை அடைந்து வேந்தரிடம் நடந்தவற்றைக் கூறினார். வேந்தனும் கவலையுற்று எவ்வாறு புலவரைக் காப்பது எனக் கவலையில் ஆழ்ந்தான்.

மடத்தைச் சேர்ந்த துறவிகள் புலவரின் வீட்டிலிருந்து அரண்மனைக்குச் சென்று, நடந்தவற்றை வேந்தனிடம் எடுத்துரைத்து, அதற்குப் 'பரிகாரம்' வேண்டினர். வேந்தன் தனது ஆசானுக்குத் துன்பம் வராது காப்பது தனது கடன் எனக்கருதி, "குடிமக்கள் செய்த குற்றம் அரசனையே சாரும். எனவே என்னுடைய உயிரைக் கொடுப்பது தகும்" எனத் துறவிகளிடம் கூறினான். அதைக்கேட்ட துறவிகள் 'கொலை செய்தவரைக் கொல்வதே தகும்' எனக்கூறி, புலவரைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டினர். வேந்தன் எவ்வளவோ எடுத்துக்கூறியும், அவர்கள் ஏற்காததால், கூத்தர் பெருமானே வேந்தனிடம் தம்மையே அவர்களுடன் அனுப்புமாறு வேண்டினார். அப்பொழுது மாலை நேரமும் வந்தது. கூத்தர் பெருமான் பூசை செய்து வருவதாகக்கூறி, அருகில் இருந்த காவிரியில் நீராடித் திருநீறணிந்து, அருகில் இருந்த காளி கோயிலுக்குள் சென்று கதவைத் தாழிட்டுப் பூசை செய்தார். பூசை

முடிவில் காளி அவர் முன் தோன்றினாள். புலவர் தம்மைக் காக்குமாறு காளியிடம் வேண்டினார். காளிதேவி வீரபத்திரர் மீது ஒரு சிற்றிலக்கியம் இயற்றுமாறு கட்டளை இட, புலவர் பெருமானும் அதனை ஏற்றுத் 'தக்கயாகப்பரணி' என்னும் இலக்கியத்தைப் பொழுதுவிடிவதற்குள் யாத்து முடித்தார். பரணியும் முடிந்தது. பொழுதும் விடிந்தது.

மடத்துத் துறவிகள் கோயிலின் கதவைத்தட்டிப் புலவரை அழைத்தனர். புலவர் கதவைத் திறந்து வெளியே வந்து, தான் வீரபத்திரர் மீது பாடிய 'தக்கயாகப்பரணி' நூலை அவர்களிடம் கொடுத்தார். அதைப்படித்த துறவிகள் பேருவகை கொண்டு, தங்களது எண்ணத்தை மாற்றிக்கொண்டு, புலவரை தமது மடத்திற்கு அழைத்துச் சென்றனர். பின்னர் வேந்தனைச் சந்தித்தனர். வேந்தனும் அவர்களிடம் 'தக்கயாகப் பரணியை' அரங்கேற்றம் செய்யுமாறு பணித்தான்.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியைத் தவிர மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், ஈட்டி எழுபது, எதிர்நூல் எழுபது, காங்கேயன் நாலாயிரக் கோவை, அரும்பைத் தொள்ளாயிரம், விக்கிரம சோழனின் கலிங்க வெற்றியைப் பற்றிய 'கலிங்கத்துப் பரணி' முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

இராமாயணம் தொடர்பாக இவரைப் பற்றி வழங்கும் செய்தி ஒன்று உண்டு. கம்பரும், ஒட்டக்கூத்தரும் போட்டியிட்டுக் கொண்டு இராமாயணத்தைப் பாடத் தொடங்கினார்கள் என்றும், கம்பர் பாடிய பாட்டுக்களின் சுவையும், நயமும் மேம்பட்டு விளங்குவதை அறிந்தவுடன், கூத்தர்பிரான் தாம் இயற்றிய இராமாயண நூலின் பகுதிகளை அழித்துவிட்டார் என்றும், அழியாமல் தப்பியது ஏழாம் காண்டமாகிய 'உத்தரகாண்டம்' ஒன்றே என்று சொல்கிறது அச்செய்தி.

சிவநெறிச்செல்வரான கூத்தர்பிரான் சிவத்தொண்டை தன் வாழ்நாள் முழுவதும் செய்து, ஓர் ஆவணித்திங்கள், உத்திராட ஓரையில் சிவனடி சேர்ந்தார்.

கவிச்சக்கரவர்த்தி, கவிஇராட்சசர், கௌடகவி, சருவஞ்ஞகவி என்றெல்லாம் பலவாறு புகழப்பட்ட ஒட்டக்கூத்தர் பெருமான் இயற்றிய இத் 'தக்கயாகப் பரணி' ஆழ்ந்த கவிநலம் நயம் உடையதாகும். பிற பரணி நூல்களைப் போல மக்களுள் ஒருவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழவில்லை. மாறாக வீரபத்திரக்கடவுளைத் தலைவனாகக் கொண்டு எழுந்துள்ளது. இதன் 814 தாழிசைகளும் சந்தஇன்பம் கொண்டு விளங்குபவை. சிவபெருமானுடைய துணைவியார் தாட்சாயினி, தன்னுடைய கணவனை மதிக்காமல் தன்னுடைய தந்தை தக்கன் (தட்சன்) செருக்குற்றுச் செய்த வேள்வியில் தன் கணவனின் சொல்லையும் மீறிச் சென்று தனது தந்தையால் அவமானமடைந்த செய்திகளையும், தக்கனால் அவமானப்படுத்தப்பட்ட நிலையில் இறைவி இறைவனிடம் தனது வருத்தத்தைக் கூறியும், இறைவன் வாளா இருந்தது கண்ட இறைவி, இறைவனைப் பிரிந்து சென்றாள். இதன் பின்னர் சிவபெருமான் நெற்றிக் கண்ணை விழித்தான். ஊழித்தீயின் வெப்பமும் அற்பம் என எண்ணுமாறு வீரபத்திரர் தோன்றினார்.

வீரபத்திரதேவரின் படைகளால் இவ்வேள்வியில் கலந்து கொண்ட அனைத்துத் தேவர்களும் கொல்லப் பெற்றனர். ஆனால் இவ்வேள்வியில் கலந்து கொண்ட திருமால் வீரபத்திரரால் கொல்லப்படவில்லை. திருமாலைப் பற்றிய செய்தியைப் பின்னர் காண்போம்.

**வேள்விக்குண்டம்**

'தக்கன் அமைத்த வேள்விக்குண்டம்' பருந்து வடிவானது.

> **"பொய்ப்பருந்து காலொடு பறந்துபோய்**
> **மெய்ப்பருந்துடன் விண்ணில் ஆடவே"** – (த.ப.507)

"பிராமணங்களில் கூறப்பட்டுள்ள இந்த வேள்வி சிவபெருமானை அவமானப்படுத்த ஏற்படுத்தப்பெற்றதோ என எண்ண வேண்டியுள்ளது. யாகத்திற்குரிய யாவையும் சேகரித்த பின்னர்

வேள்வி நிகழ்த்துபவர், தலைமை ஆசார்யனைப் பார்த்து, யாகத்தைத் தொடங்கலாமா? என்று கேட்பார். அப்பொழுது ஆசார்யன் இந்த யாகத்தில் ருத்ரனைத் தவிர மற்ற யாவர்க்கும் 'பலி' உண்டு. மற்ற யாகங்களில் ருத்ரன் ஒதுக்கப்படுவதுபோல இதிலும் ஒதுக்கப்படுவான். எனினும் அவன் பொல்லாதவன்".

"வேள்வி நடைபெறும் பொழுது நமக்கு இடையூறு செய்ய முற்படுவான். எனவே அவனைத் திருப்திபடுத்த ஒரு செயல் செய்ய வேண்டும். வேள்விச் சடங்கிற்குத் தகுதியற்றவையாகிய மண் கலசம், ஆட்டுப்பால், எருக்கஇலை ஆகியவற்றை சேகரிக்கவும். மண்சட்டியில் ஆட்டுப்பாலை நிரப்புக. சுருவுக்குப் பதிலாக எருக்க இலையைக் கொள்க. கருடனின் விரிந்த சிறகின் இடப்பக்கம் ஆட்டுப்பாலை எருக்க இலைச் சுருவினால் அவிழாகச் சொரிக. இவ்வாறு 'அவிழ்' சொரியும் பொழுது 'ஸ்ரீ ருத்ரம்' மந்திரங்களை உச்சரிக்க எனக் கட்டளை இடுகிறான்.

ஆக, கருடன் வடிவில் செய்யற்பெற்று நிகழ்வுறும் இவ்வேள்வியே சிவபெருமானை அவமதிப்பதற்கென்றே செய்யப்பெற்றதாகும். எனவே தான் வீரபத்திரரின் ஏவல் ஏற்ற கூளிகள் பருந்து வடிவில் அமைந்த இந்த யாக குண்டத்தைத் தகர்த்து ஆகாயத்தில் வீசின. கலந்து கொண்ட அனைத்துத் தேவர்களும் கொல்லப்பெற்றனர். கருட சயன யாகம் தக்கன் செய்தான் என்று கூறுவது வேதங்கள், பிராமணங்கள் ஆகியவற்றில் ஒட்டக்கூத்தருக்கு இருந்த ஆழ்ந்த புலமையைக் காட்டுவதாகும்". என்கிறார் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள்.

கவிச்சுவையும், தமிழ்ப்புலமையும் மிக்க ஒட்டக்கூத்தர் பெருமானின் தக்கயாகப்பரணி நூலைத் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதஐயர் அவர்களின் கடுமையான உழைப்பாலும், இடைவிடாத முயற்சியாலும் 1930ஆம் ஆண்டு இதன் மூலத்தையும், பழைய உரையையும் (உரையாசிரியர் பெயர் தெரியவில்லை) வெளியிட்டார். 1945இல் தமிழ்த்தாத்தா அவர்களே இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டார்.

ஒட்டக்கூத்தருக்குத் திருஞானசம்பந்தர் மீது ஆழ்ந்த பக்தி. திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான்

ஞானசம்பந்தப்பெருமானைச் சிறப்பித்துப் பாடியதுபோலவே, ஒட்டக்கூத்தரும் அவருடைய வாழ்க்கையை 51 தாழிசைகளில் விரித்துக் கூறுகிறார். குமரக்கடவுளேத் திருஞானசம்பந்தராகத் தோன்றினார் என்னும் கருத்தை முதன்முதலில் கூறியவர் ஒட்டக்கூத்தரே!

'சைவசித்தாந்தம்' தத்துவம் என்ற முறையில் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில்தான் என்றாலும், ஒட்டக்கூத்தர் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கே கூறிச் செல்கிறார். சாக்த சமயம் பற்றிய கருத்துக்களையும், வைரவ சமய வழிபாட்டுமுறைகளையும் மிக விரிவாகவே விளக்குகின்றார் ஆசிரியர் பெருமகனார்.

"பாலை நில வருணனை இலக்கிய அழகுமிக்கது". கங்கை சிவபெருமானுடைய சடையில் மறைந்திருப்பது, உமையம்மையின் சினம் கருதியன்று. பாலை நிலத்தின் வெப்பம் தாங்காமையால், போன்ற விளக்கங்கள் மீண்டும் மீண்டும் படித்து இன்புறத்தக்கன.

**தக்கயாகத்தில் திருமால்**

1. மணிவாசகப்பெருமான் திருவாசகத்தில் (திருவுந்தியார்)

> *'ஆஆ திருமால் அவிப்பாகம் கொண்டு அன்று*
> *சாவாது இருந்தான் என்று உந்தீபற*
> *சதுர் முகன் தாதை என்று உந்தீபற"*

பிரம தேவனுக்குத் தந்தையாகிய திருமாலானவன் தக்கன் வேள்வியில் அவியுணவைக் கொண்டு, அந்நாளில் வீரபத்திரரால் தாக்கப்பட்டு உயிர் ஒன்றையுமே உடையவனாய் இருந்தான் என்று சொல்லி, உந்திப் பறப்பாயாக!

2. **ஒட்டக்கூத்தரது தக்கயாகப் பரணியில்**

> *விதைக்கும் அப்பகழிவிற் பொருதன் வைத்தமுடியால்*
> *மிக வளைந்து, குதைபோய் நெகிழவின்னுற நிமிர்ந்து*
> *உதைக்கும் அத்தலை எழுந்து குதை கவ்வியதுவான்*
> *உற்ற சந்தரனையும், ராகுவையும் ஒக்கும் எனவே"*

அம்புகளை எய்தற்பொருட்டு நாணால் வளைத்து வைக்கப்பட்ட அந்த வில்லின் ஒருமுனையைத் திருமால் தமது தலையால்

அழுத்தினமையால் வில்லின் ஒரு முனை மிகவும் வளைய, அதிலிருந்து நாண் கழன்றமையால், வில் அதிவேகமாக ஆகாயம் அளாவ நிமிர்ந்த பொழுது, மாயோனது தலை அறுபட்டு வானத்தில் பறந்தது. அந்தத் தலையை முன்பு கழன்ற நாண் சூழ்ந்தது. அது சந்திரனை இராகு விழுங்கியது போலக் காணப்பட்டது. எனவே திருமாலை வீரபத்திரர் கொல்லாது, அவர்தாமே தமது செயலால் தலை இழந்தார் என்பதாம்.

3. புராணங்களுக்கு இடையில் இந்த நிகழ்ச்சி விளக்கத்தைப் பற்றி வேறுபாடு உண்டு. திருமால் இந்தயாகத்தில் கலந்து கொண்டது உண்மையன்று. ஏனென்றால் பரவஸ்துவே சிவபெருமான் என்றும் திருமால் என்றும் அழைக்கப்படுகின்றது, என்பார் சித்பவானந்த அடிகள் தமது 'திருவாசகம் விளக்க உரையில் ஆனால் எந்தப் புராணம் இவ்வாறு கூறுகிறது என்று அவர் எழுதவில்லை! ஒட்டக்கூத்தர் கடைதிறப்புப் பகுதியில் சிவபெருமானை முழுமுதற்கடவுள் என்பதை வலியுறுத்துகிறார்.

'மூவராய் அவரின் முதல்வராய், அதிதி
புதல்வராய முப்பத்துமுத்
தேவர் ஆய் அவர்தம் ராசராசபுரி".

இரண்டாம் குலோத்துங்கன் தில்லை மன்றிலுள்ள திருமால் திருவுருவத்தைக் கடலில் எறிந்த வரலாறு குறித்து இந்நூல் கூறுகின்றது. பாண்டிய நாட்டைச் 'செந்தமிழ் மண்டலம்' என்றே குறிப்பிடுகின்றது. இவ்வாறு இவ்விலக்கியத்தின் சிறப்பைக் கூறிக்கொண்டே இருக்கலாம். ஆயினும் விரிவஞ்சி அவற்றை விடுக்கின்றேன். இந்நூல் முழுவதையும் படித்துச் சைவத்தமிழமுதம் பருகும்படி அனைவர்க்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஆனால் இங்கு நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். 'கௌடகவி', 'கவிராட்சசர்', 'சருவஞ்ஞகவி', 'கவிச்சக்கரவர்த்தி' என்று பல்வேறு சிறப்புப் பட்டங்களைப் பெற்ற கூத்தர் பெருமானின் 'தக்கயாகப்பரணி' என்ற மகத்தான பரணி இலக்கியம், 'கலிங்கத்துப்பரணி' தமிழ் மக்களிடையே பரவிய அளவிற்குக்கூடப்

பரவவில்லை என்பது வருந்தத்தக்க செய்தி. அதிலும், கலிங்கத்துப்பரணி மண்ணுலகவேந்தனைப் புகழ்ந்துபாட, தக்கயாகப்பரணியோ விண்ணுலக வேந்தரை (சிவபெருமான்) அல்லவா புகழ்கின்றது. அப்பா, மகன், பெயரன் என மூன்று சோழப்பேரரசர்களின் அவைகளப்புலவராகக் கூத்தர் பெருமான் இருந்தும் 'தக்கயாகப்பரணி' நியயாமாகப் பெறவேண்டிய புகழைக்கூட பெறவில்லை. தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற சைவசமயப் பக்திப் பனுவல்கள் இன்று பெறும் வரவேற்பை, ஏனோ தக்கயாகப்பரணி பெறவில்லை. எனவே கீழ்க்கண்ட வேண்டுகோளைத் தமிழ்ச்சான்றோர் முன் வைக்கின்றேன்.

இந்நூலைச் சைவசமய ஆதினங்களும், திருமடங்களும், பொழிப்புரை, குறிப்புரைகளுடன் வெளியிட வேண்டும். திருக்கோயில்களில் பன்னிரு திருமறை நூல்களுடன் இதனையும் சேர்க்க வேண்டும். தமிழ் அமைப்புகள் 'தக்கயாகப்பரணி' குறித்த சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

'வாழிதமிழ்ச்சொல் தெரிந்த நூல்துறை;
வாழி தமிழ்க் கொத்து அனைத்து மார்க்கமும்;
வாழி திசைக்கு அப்புறத்து நாற்கவி
வாழி கவிச் சக்ரவர்த்தி கூத்தனே"

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காத தமிழ் வாழ்க.

# மொழித் திறன்களில் பள்ளியின் பங்கு

முனைவர் சு.குழந்தைவேல்பன்னீர்செல்வம்

மனிதன் தனது கருத்தினை மற்றவர்களுக்கு புலப்படுத்த உரையாடல் புரிகின்றான். இதில் மொழிய்ய மட்டுமின்றி மொழிச்சாராக் கூறுகளான முகம், கை, கால் போன்ற உறுப்புகளின் உதவியால் தனது எண்ணத்தை பிறர்க்கு உணர்த்துகிறான். என்றாலும், மொழியே மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது.

மொழி என்பது வேறு மொழியமைப்பு என்பது வேறு. ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதென்பது மொழியமைப்பைக் கற்றுக் கொள்வது மட்டுமல்ல அந்த மொழியை பயன்படுத்துதல் பற்றியும் கற்றுக்கொள்வதாகும். மொழிக்கற்பித்தல் என்பது வெறும் எழுத்துப்பயிற்சி மட்டுமின்றி சொற்களுக்குரியப் பொருளுணர்த்திறனை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இவ்விரு (மொழி மற்றும் பொருளுணர்) திறன்களை வளர்க்க மிகவும் பொருத்தமான இடம் தொடக்கப்பள்ளியே ஆகும்.

**ஆய்வின் நோக்கம்**

மாறுபட்ட பல சூழல்களில் இன்றைய மாணவன் குறிப்பிட்ட ஒரு மொழியைப் பயன்படுத்த தெரிந்தால்தான் அவன் அம்மொழியைக் கற்றதாக அமையும். இந்த நூற்றாண்டின் சவால்களைச் சமாளிக்க நான்கு முக்கியக் கூறுகளை கல்வி பெற்றிருக்க வேண்டும் என UNESCO கூறுகிறது.

* அறிந்து கொள்ளக் கற்றுக்கொள்ளல் (Learning to know)
* செய்வதற்கு கற்றுக் கொள்ளல் (Learning to do)
* உள்ளத்தில் உண்மையாக இருக்கக் கற்றுக்கொள்ளல் (Learning to be)
* சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளல் (Learning to live together)

என்ற இந்த நான்கு குறிக்கோள்களை அடைய மொழிக்கல்வி இன்றியமையாததாகிறது. மொழிதான் மற்றவற்றை அறிவதற்கு வழிகாட்டி, மொழியால் செயல்கள் செம்மைப்படும். மொழி நம்மை நமக்கு உணர்த்தி நாம் நாமாகவும், நலமாகவும் வாழ்வதற்கு வழி கோலும். இதனால்தான் கல்வியின் அடித்தளமாக இருப்பது தாய்மொழியே என கல்வியாளர்கள் வலியுறுத்துகிறார்கள். இதற்குத் தாய்மொழியைப் பிழையின்றி பயன்படுத்தவதாலும் அம்மொழியால் பெற்ற சொற்களுக்கு பொருளுணர்வதாலும் மட்டுமே இயலும். இத்திறன்களை வளத்துக்கொள்ள அடிப்படையாகவும் ஆர்வத்தை உண்டாக்குவதுமாக உள்ளது தொடக்கப்பள்ளியே ஆகும்.

**கருதுகோள்**

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அவர்களது தாய்மொழி மூலம் தனது நாட்டின் தன்னினத்தாரின் உண்மைகள், மரபுமுறையிலான பழக்க வழக்கங்கள், பண்பாட்டுத் தன்மைகள், கலை முதலிய நுண்ணுணர்வுகளை இளம் உள்ளத்தில் ஆழமாகப் பதியவைக்க முடியும். தொடக்கநிலை வகுப்பு மாணவர்கள் பாடப்பொருளை எவ்வளவு பெற்றார்கள் என்பதல்ல முக்கியம். அதனை எவ்வாறு பெற்றார்கள் அல்லது பெறவேண்டும் என்பதுதான் முக்கியம். இதற்கு ஆசிரியர்களுக்குப் போதிய அளவு உளவியலில் அறிவுத் தேவை என்பதுடன், இளம் உள்ளங்களின் சூழ்நிலைத்தன்மையை உணர்ந்து அதன் வழி மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தலில் மொழியை முதன்மைப்படுத்தினால் மொழிப்பயிற்றுதலின் அடிப்படைத் திறன்களாவன:

- கேட்டல் (Learning)
- பேசுதல் (Speech)
- படித்தல் (Reading)
- எழுதுதல் (Writing)

என்ற நான்குத் (LSRW) திறன்களையும் முறையாகவும், முழுமையாகவும் பெற முடியும். இத்திறன்கள் வளரத்தடையாக இருப்பது மாணவர்களின் கவனக்குறைவு, சோர்வு, சளிப்பு,

ஆர்வமின்மை போன்றவை. இதனை தனது கற்பித்தல் உத்திகள் மூலம் ஆசிரியர் நீக்கிட முடியும். இதை செயல் ஆய்வு நிகழ்த்திட ஒரு தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுமுறை**

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான ஒரு உரைநடைப்பாடம் மற்றும் ஒரு செய்யுள் பாடத்தினை எடுத்துக்கொண்டு அதனை விளையாட்டு முறை, துணைக்கருவிகள் மூலம் கற்பித்தல், களப்பணி மற்றும் ஒலிப்பதிவு நாடா இவற்றின் மூலம் மொழித்திறன், பொருளுணர்த்திறன்களை வளர்க்க உதவுதல். இதற்கு,

* திறன் வரையறை
* கற்பித்தல் முறைகள்
* ஆயத்தப்படுத்துதல்
* கற்றல், கற்பித்தல் கருவிகளும் கல்வித் தொழில் நுட்பமும்
* செயல்பாடுகளும் பணி அனுபவமும்
* மதிப்பீடு மற்றும் மாணவர்களின் குறைகளை அறியச் செய்தல்
* தொடர்ப்பணியளித்தல் போன்ற ஏழு கூறுகளைக் கையாளுதல்

**மொழித்திறன் வளர்ப்பதில் ஆசிரியரின் வகுப்பறைச் செயல்கள்**

* கடந்த காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் மொழி ஒருபாலமாக இருக்கிறது. மொழியில்லாதிருந்தால் மனிதன் காலந்தோறும் அறிவைப் படிப்படியாக வளர்த்திருக்க முடியாது. எனவே, மொழியை அதன் திறன்களை மேலும் வளர்த்துக் கொள்ள சொற்களை நிறுத்தியும் குரலில் ஏற்றத்தாழ்வுடனும் அதற்குரியத்தன்மை மாறாமல் வாசித்துக் காட்டுதல் வேண்டும்.

* நீண்ட வாக்கியங்களை பொருள் மாறாத வகையில் வார்த்தைகளைப் பிரித்துப் படித்துக்காட்டுதல் வேண்டும்.

* ஒலிப்பதிவு நாடாவின் மூலம் செய்யுள் பகுதிகளை தெளிவாக குரல் ஏற்ற இறக்கத்துடன் பாடிப்பதிவு செய்து அதனை வகுப்பறையில் ஒலிக்கச் செய்தல் வேண்டும்.

* உரைநடைப் பகுதியை நிறுத்தற்குறியுடன் தெளிவாக ஒரு மாணவரைப் படிக்கச்செய்து அதனை மற்ற மாணவர்கள் கேட்குமாறு செய்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும்.

**பொருளுணர் திறனை வளர்ப்பதில் ஆசிரியரின் வகுப்பறைச் செயல்கள்**

ஆசிரியர் மேற்கொள்ளவிருக்கும் கற்பித்தல் முறைகளை பாடத்தின் அமைப்பிற்கேற்ப விளையாட்டு முறை, வினாவிடை முறை, கண்டறிமுறை, விதிவருமுறை, விதிவிலக்குமுறை, நடிப்புமுறை, செய்து கற்றல் முறை என பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தேர்வு செய்து கொள்ளல் வேண்டும்.

* பொருள் புரியாத சொற்களை கரும்பலகையில் எழுதி அச்சொற்களைப் பிரித்துக்காட்டி பொருளுணர்ந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

* கடுமையான சொற்களுக்குரிய பொருளை முதலில் கூறி, பிறகு அச்சொல்லை மாணவர்களுக்குக் கூறுதல் 'பொருள்முன்' 'சொல்பின்' என்ற உளவியல் கொள்கையின்படி செயல்படுதல் வேண்டும்.

* புதியச் சொற்களின் பொருளுக்குரிய படங்களை வகுப்பறையில் காண்பிப்பதால் படங்களின் வழியே அச்சொற்களுக்கானப் பொருளை ஆர்வத்துடன் அறிந்து கொள்வர்.

* செய்யுளை இராக, தாளத்துடன் பாடிக்காட்டுதல், பொருள் கூறுதல், ஒளிப்பதிவு நாடாவின் மூலம் ஒலிப்பு முறைகளை அறியச் செய்தல் குறிப்பிடத்தக்கது.

* பள்ளியருகில் உள்ள வயல், தோட்டம், ஆறு, மலை போன்ற இடங்களுக்கு களப்பயணமாக அழைத்துச் சென்று நேரடி அனுபவம் பெறச்செய்தல் வேண்டும்.

## மொழியாற்றல், பொருளுணர்த்திறனை அளந்தறியும் கருவிகள்

முன் தேர்வி (pre-test) மூலம் மாணவர்களின் அடைவுத்திறனை (achievement) அறிந்து,

* கற்பித்தல் முறையில் பொருத்தமான மாற்றம் செய்தல்,

* இனிமையான, விரும்பத்தக்க வகுப்பறைச் சூழலை ஏற்படுத்துதல் ஆகியவை மொழியாற்றல் பொருளுணர்த்திறனை அளந்தறியும் கருவிகள் ஆகும்.

## செயல்களுக்குப் பந்துயத் தேர்வு

முன் தேர்வுக்கு பிறகு கையாளப்பட்ட கற்பித்தல் மாற்றத்தினால் மாணவர்கள் பெற்ற கற்றலின் தரத்தை அளவிட பின் தேர்வு நடத்தி மதிப்பிடுதல், திறன்கள் தொடர்பான வளர்ச்சிக்கு வலுவூட்ட பயிற்சி வினாக்கள், வீட்டு வேலைகள், செயல்கள் போன்ற ஊக்கிகளினால் பெற்ற அடைவை இதன் மூலம் அறியலாம். இத்திறன்கள் மேலும் வளரத்தேவையான கற்பித்தல் நுணுக்கங்கள் ஆகியவற்றை அறிந்து அதன்வழி செயல்படலாம்.

## செயலாய்வின் முடிவுகள்

வகுப்பறையில் ஆர்வம், கவர்ச்சி, இனிமையான சூழ்நிலை இவற்றை ஆசிரியர்கள் ஏற்படுத்தினால் மாணவர்களின் கற்றல் திறன் வளர்கிறது.

* துணைக்கருவிகள் உதவியால் கற்பித்தலை மாணவர்கள் விரும்புகிறார்கள். பொருள்களை கண்டும், தொட்டுப்பார்த்தும், நேரடி அனுபவங்களைப் பெறுவதை மிகவும் விரும்புகின்றனர்.

* இயற்கையானப் பொருள்களை நேரடியாகப் பார்த்து, உண்மைத் தன்மையை உணர்ந்து, கொள்வதால் பாடப்பொருள் முழுமையானதாகக் கிடைக்கிறது.

* ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடுவதால் மொழித்திறன் வளர்கிறது. சரியான ஒலிப்பு முறை வளர்கிறது.

* சரியான உளவியல் அறிவுடன் ஒரு ஆசிரியர் தகுந்த முறையில் கற்பித்தால் மாணவர்களின் கற்றலில் ஈடுபாடு அதிகமாகிறது.

* காட்சி–கேள்வி (Video & Audio) துணைக்கருவிகள் வழியே கற்பித்தல் நிறைந்த பயனைத்தருகிறது.

* சொற்களை கரும்பலகையில் எழுதி அதனைப் பிரித்துக்காட்டிப் பொருள் கூறுவதால் கடின சொற்களுக்குரிய பொருளை எளிதாகப் புரிந்து கொள்கின்றனர்.

**முடிவுரை**

"தாய் மொழியை போற்றியவர் வீழ்ந்ததுமில்லை. அதைப்புறக்கணித்தவர் வாழ்ந்ததுமில்லை" என்ற பேராசிரியர் முத்துசிவன் அவர்கள் கூறியதை மனதில் கொண்டு தொடக்கப்பள்ளியில், மொழிவழி சார்ந்தத் திறன்களை வளர்க்க ஆசிரியர்கள் தேவையான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கு,

* வகுப்பறை ஆனந்தமாக இருக்க தகுந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

* விளையாட்டு முறை மூலம் மாணவர்களுக்கு கற்பிக்கலாம்.

* துணைக்கருவிகள் ஆர்வம், கவர்ச்சி, ஈடுபாடு இவைகளை வளர்க்கிறது. எனவே இதனைப் பயன்படுத்திக் கற்பித்தல் மிகவும் அவசியமாகிறது.

* உணர்ச்சியுடனும், குரல் ஏற்ற இறக்கத்துடனும், பேசுதல், பாடுதல், நல்ல மொழித்திறன் வளர்ச்சிக்கும், பொருளுணர்திறன் வளர்ச்சிக்கும் உதவுகிறது.

# அறிவுக்கு விருந்தாகும் பெரும்புள்ளிகள்

பேரா. நெல்லை ந.சொக்கலிங்கம்
'பொதிகை', நாகமலை,
மதுரை – 625 019.

**புள்ளிகளின் பெருமை**

முதலில் வெண்புள்ளிகள் பின் சிறுபுள்ளிகள் அடுத்துப் பெரும்புள்ளிகள் எனச் சிலபுள்ளிகள். வெண்மையான புள்ளிகளை மையமாக வைத்து நம் வீட்டு வாசல்களிலே அரிசிமாக் கொண்டும், கோலப்பொடி கொண்டும் அழகான கோலம் போட்டுப் பார்ப்பவர் கண்களையும் கருத்துக்களையும் கவர்கின்ற நம் வீட்டு மங்கையர்போல அமைந்ததுதான் பேரா.தி.அ.சொக்கலிங்கத்தின் படைப்பான 'பெரும்புள்ளிகள்' என்ற நூலாகும். இந்நூல் நம் அறிவுக்கு விருந்தாக அமைகின்றது. புள்ளிகளை இணைத்துக்கோலம் போடும் அன்றைய மகளிர் இளம்பருவத்திலேயே கணக்கறிவை மிகுதியும் பெற அடித்தளம் அமைத்துக் கொண்டனர். இன்றோ ஸ்டிக்கர் கோலங்கள் நம்வீட்டு வாசல்களை அழகு செய்கின்றன. மகளிர் வீட்டிற்கு முன்னர் அரிசிமாக்கோலம் போடுவதன் வாயிலாகச் சிற்றுயிர்களுக்கு உற்ற துணையாகின்றனர். இதனால் அவர்களுடைய ஈர நெஞ்சம் வெளிப்படுகிறது; அது மட்டுமா? அவர்களுடைய கலையார்வமும், மனதை ஒருமுகப்படுத்தும் உணர்வும்; குனிந்து நிமிர்வதால் உடற்பயிற்சியும் வெளிப்படுதல் கண்கூடு. இத்தகைய நன்மைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் புள்ளிக்கோலம் போன்று பேரா.சொக்கலிங்கனாரின் பெரும்புள்ளிகள் என்னும் நூலும் விளங்குகின்றது என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

நெல்லை இந்துக்கல்லூரியில் நான் பயின்று கொண்டிருந்தபோது என் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் வருகைப்பதிவு எடுக்கும்போது சில மாணவருடைய பெயரின் அருகில் புள்ளி வைப்பார். விளக்கம் கேட்டால் நான் புள்ளி வைத்துவிட்டேன் என்றால், 'வகுப்பிலிருந்து அவனைத் தள்ளி வச்சிட்டேன்னு பொருள்' என்று கடுமையாகச் சாடுவார். இது இப்போது என் நினைவிற்கு வருகிறது.

"பிடிக்காத பெயர்கள் மீது
புள்ளி வைத்து ஒதுக்குவதே
வேலையாகி விட்டது
பலபெரும்புள்ளிகளுக்கு,
பிரச்சனைகளுக்குத்
தீர்வு காண்பதை விடவும்
அதற்கொரு முற்றுப் புள்ளி
வைப்பதில்தான்
ஆர்வமாக இருக்கிறார்கள்
எல்லோரும்"

(ஜெயபாஸ்கரன் கவிதைகள், ப.44)

என்று புதுக்கவிதை ஒன்றில் திரு.ஜெயபாஸ்கரன் கூறுவதும் இங்கே எண்ணத்தகும்.

கரும்புள்ளி, செம்புள்ளி போட்டு ஒருவரை இழிவுபடுத்தும் வழக்கம் இன்றும் சில கிராமங்களில் உள்ள நடைமுறை. இப்படிப் புள்ளிகளில் பல வகைகள் உண்டு. ஆனால் நம் பேராசிரியர் குறிப்பிடும் பெரும்புள்ளிகளோ நம்முடைய அறிவுக்கு விருந்தாகும் பெரும்புள்ளிகள் ஆவர். 18, 19, 20–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த 'சில பிரபலங்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள்' என்றாலும் அவற்றின் வீச்சும் பேச்சும் நம்மை வியக்க வைக்கின்றன.

**இலக்கியச் சூழல் காரணம்**

பேரா.சொக்கலிங்கனாரின் 'பெரும்புள்ளிகள்' என்ற நூல் ஆனந்தவிகடன் இதழில் 'குகன்' என்ற புனைபெயரில் தொடராக வந்த சுவையான எழுத்தோவியங்கள் ஆகும். அவர் வெறும்புள்ளிகளை விலாவாரியாகப் பேசவில்லை! பெரும்புள்ளிகளைப் பற்றியே பேசியுள்ளார். பிறரால் பெருஞ்சுட்டுவேண்டிப் பாடுபட்ட பெருந்தகைகள் பற்றியே இவர் இந்நூலில் விரிவாகப் பேசுகின்றார்.

சங்கரன்கோவிலுக்கு அருகில் உள்ள சிற்றூராகிய முள்ளிக்குளத்தில் பிறந்து வளர்ந்த திருநீலகண்டம்; அழகிய சொக்கலிங்கம் நெல்லை ம.தி.தா.இந்துக்கல்லூரியில் இடைநிலை வகுப்பை (Intermediate) முடித்தார். அக்காலச் சூழலில் இரசிகமணியின் 'வட்டத்தொட்டி' என்னும் இலக்கியச் சுவைக்குழு

ஏற்றம் பெற்றிருந்தது. இரசிகமணி, இராசகோபாலாச்சாரியார், நீதிபதி மகாராசன், கு.அருணாசலக்கவுண்டர், இரா.பி.சேதுப்பிள்ளை போன்ற பெருமக்கள் கூடி, இலக்கிய முற்றம் நடத்துவர். இதன் தாக்கத்தைப் பேராசிரியரின் எழுத்தில் காணமுடிகிறது. இந்துக் கல்லூரியில் வ.ஐ.சுப்பிரமணியம், ஆ.முத்துசிவன், அ.சீனிவாசராகவன், இராவ்சாகிப் அலெக்சாந்தர் ஞானமுத்து, பெ.நா.அப்புசாமி, பட்சிராஜன் போன்ற சான்றோர்களின் தொடர்பும்கூட இவருடைய எழுத்தில் ஆளுமை செலுத்தியிருக்கக்கூடும். பேராசிரியருடைய எழுத்து வன்மைக்குப் 'பெரும்புள்ளிகள்' பெருஞ்சான்றாக விளங்குகின்றது. மேலே கண்ட இலக்கியச் சூழல் ஒரு நல்ல இலக்கியச் சுவைஞரை – படைப்பாளியை உருவாக்கிற்று என்றால் அது மிகையாகாது. இந்நூலில் 42 கட்டுரைகள் உள்ளன. அவ்வளவும் இலக்கியம் மற்றும் வரலாற்றுப் பதிவுகள் என்று துணிந்து கூறலாம். சொற்களால் வாசகரின் மனத்தைச் சுண்டி இழுக்கும் சூட்சுமத்தை நன்கு அறிந்தவர் பேரா.சொக்கலிங்கனார் என்பது 'பெரும்புள்ளிகள்' என்ற நூலைப் படிப்பவர்க்கு எளிதில் புலனாகும்.

**உயிர்த்துடிப்புள்ள நடை**

பேராசிரியர் சொக்கலிங்கம் தம் வாழ்நாளில் நேரிற் கண்ட நிகழ்ச்சிகளையும், சான்றோர்களையும், பெருந்தகையாளர்களையும் குறித்து ஆனந்த விகடனில் (1989 – 1992 வரை) எழுதி வந்த எழுத்தோவியங்களே இவை ஆகும். வேறு எவர் எழுத்திலும் சொல்லப்படாத சில அரிய குறிப்புகளை இவருடைய பெரும்புள்ளிகளில் பதிவு செய்துள்ளார் என்றால் பேரா.சொக்கலிங்கனாரின் நினைவாற்றலும் எழுத்து வன்மையும் பளிச்சிடக் காண்கின்றோம். சிலரைப் பற்றிச் சொல்லும்போது வருணனை நடையில் எடுத்துரைப்பார். யாரைப் பற்றிக் கூறுகிறாரோ அவர் நம் கண்முன் வந்து நிற்பார். இவருடைய வருணனை நடை உயிர்த்துடிப்புள்ள ஒப்பற்ற நடை போன்று விளங்கிற்று. இதற்கு ஒன்றிரண்டு சான்றுகளை இங்கே நாம் காண்போம்.

வெள்ளைவாரணாரை நம் தமிழ் உலகம் நன்கு அறியும். நான் மிகவும் வணங்கிய பெருந்தகை ஆவார். "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் குறளுக்குக் காட்டாய் விளங்கியவர். இந்நூலில் அவரின் அறிமுகச் செவ்வி ஓவியம் தீட்டிக் காட்டியது போல் இருக்கும்.

அகத்தியரைப் பற்றி நாமெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவரை நினைத்தவுடன் குள்ளமான உருவமும் பொதியமலையும் நம் ஞாபகத்துக்கு வரும். ஆனால் நமது பேராசிரியரைப் பார்ப்பவர்களுக்கோ அகத்தியரும் கூடவே தமிழும் நினைவுக்கு வரும். அவர்தான் பேராசிரியர் க. வெள்ளை வாரணம். குறைவான உயரம். ஒட்ட வெட்டிய கிராப்புத்தலை. வயசை மதிப்பிட முடியாத முகக்கட்டு. முப்பது வருஷங்களுக்கு முன்னால் பார்த்ததுக்கும் இப்போது பார்ப்பதுக்கும் வித்தியாசம் தெரியாத ஒரே சீரான உடம்பு, தமிழ் உலகத்தில் இவரை ஜாம்பவான் என்று சொல்லுவார்கள். சித்தாந்தத்திலிருந்து இலக்கணம் வரை அனைத்தும் இவருக்கு அத்துபடி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் பேராசிரியராக இருந்தபோது 'அண்ணாமலையார் அகத்தியர்' என்றுதான் எல்லோரும் மரியாதையோடு அழைப்பார்கள். (பெரும்புள்ளிகள் ப.38).

இன்னொருவர் வக்கீல் ஐயா எஸ்.இராமசாமிக்கோனார் இவரையும் நான் இந்துக் கல்லூரியில் படிக்கும்போது நேரில் பார்த்திருக்கிறேன். இந்த வக்கீல் ஐயாவை பேரா.தி.அ.சொ. சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுவதைப் பாருங்கள்.

"பஞ்சுப்பெட்டியாய் வெள்ளைவெளேர் என்று நரைத்த தலைமுடி. ஆறடிக்கும் அதிகமான உயரம், பரந்து விரிந்த உயர்ந்த நெற்றி, தீட்சண்யமான கண்கள். தீர்க்கமான மூக்கு, சிரித்த முகம், நீளமான கைகள் புது (பொது) நிறம். வெண்கலச் சிரிப்பு எடுப்பானது நடை – இப்படி அமைதியாகவும், அதே சமயம் ஆஜானுபாகுவாகவும் நடந்து வருபவர் 'வக்கீல் ஐயா' வாகத்தான் இருக்க முடியும்" (மேலது, ப.43).

இந்த உயிர்த்துடிப்புள்ள ஓவியத் தமிழ் நடையைப் படிக்கும்போது பாரதியாருடைய வர்ணனை நடை எனக்கு இங்கே நினைவிற்கு வருகிறது. இதோ அந்நடை, "சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு; சிறியதோகை; துளித்துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு

உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்' (பாரதியார் கட்டுரைகள், ப.204) என்று பாரதியார் நம் கண்முன்னே சிட்டுக்குருவியைக் காட்டிவிடுவார்.

திரு.தி.அ.சொ., இந்துக் கல்லூரியின் முதல்வர் அலெக்சாந்தர் ஞானமுத்து அவர்களைப் படம் பிடித்துக்காட்டும் பாங்கே தனித்தன்மையுடையது. "நல்ல உயரம் அதற்கேற்ற பருமன். வெள்ளைக்காரர்களைப் போல அலுங்காமல் குலுங்காமல் அணியும் உடை அழகு; ரோஜாப் பூவா அல்லது எலுமிச்சம் பழமா என்று திகைக்க வைக்கும் நிறம். பரந்து விசாலமான முகம்; சுருள்முடி, சின்ன மீசை (அது உதட்டுக்கும் மூக்குக்கும் இடையில் உள்ள பள்ளத்தில் மாத்திரமே தெரியும்) கழுத்தில் நீளமான தங்கச் சங்கிலியில் 'சுவஸ்திக் சின்னம்' (இவருடைய வீட்டுப் பெயரும் சுவஸ்திக் தான்) கனமாக மூக்குக் கண்ணாடி நம்மால் எளிதில் பொருள் காணமுடியாத 'மோனலிசா' சிரிப்பு – இவைதான் லட்சக்கணக்கான மாணவர்களைக் கவர்ந்த முதல்வர் அலெக்சாந்தர் ஞானமுத்துவின் உருவ அமைப்பு." (மேலது, ப.146) என்று இவர் நடையைப் படிக்கும் போது முதல்வர் ஞானமுத்து என்கண் முன்னே நடந்து போவது தெரிகிறது.

சமுதாயத்தின் மேல்தளத்து மாந்தர்களை மட்டுமா பேரா.சொக்கலிங்கம் வருணித்தார். இவர் புதினங்களிலே வரும் பாத்திரங்களின் வருணனை போலச் சுப்பிரமணி என்ற பியூனைக் கூட நம் கண்முன்னே நடந்து வரச் செய்து விடுகின்றார். இதோ சுப்பிரமணியைப் பாருங்கள்; "சுப்பிரமணி ஒரு வித்தியாசமான ஆசாமி. ஒல்லியான உடல்வாகு மாசத்துக்கு ஒருவாட்டியே சவரம் செய்கிற முகம்; குழி விழுந்த கன்னங்கள்; சாதாரண உயரம்; கரண்டைக் காலுக்கும் முட்டுக்கும் தொங்குகிற, துவைத்து 'நீர்க்காவி'. ஏறின வேட்டி – துவைத்த சட்டை – அது என்ன கலர் என்று யாரும் கண்டு பிடிக்க முடியாது. நாட்டு மருந்து சாப்பிட்டதால் பல்லெல்லாம் போன பொக்கை வாய்; வயசு அப்போது நாப்பத்தஞ்சு அல்லது ஐம்பதுக்குள் இருக்கும். வார்த்தை சரியாக வெளிவராது. மலையாளம் பேசினால் தமிழ்ப் போல இருக்கும்; தமிழ்ப் பேசினால், மலையாளம் போலத் தோணும். அப்படி ஒரு வகையான உச்சரிப்பு". (மேலது, ப.68) இவையாவும் நம் அறிவுக்கு விருந்தாக அமைகின்றன எனலாம். இப்படித் தாம் சொல்லிவரும் ஆளுக்கேற்ற வகையில் வருணனை செய்து நம் கண்முன்னலே கொண்டு வந்து நிறுத்துகின்ற உயிர்த்துடிப்புள்ள ஒப்பற்ற நடை இயல்பாகவே இவருக்குக் கைவந்த கலையாக விளங்கிற்று.

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, மனோன்மணியம் சுந்தரனார் போன்ற வரலாற்றாய்வாளர்கள் பணியாற்றிய இந்துக்கலாசாலையில் பயின்ற பயிற்சியோ தாக்கமோ இவரை மிகுதியும் பாதித்திருக்க வேண்டும். 42 பேருடைய வரலாற்றை வளமான தமிழ்நடையில் வடித்துத் தந்த வன்மையினால் இவருக்குள் இருந்த தேடுதல் வேட்கையும், களஆய்வு செய்து கருத்துக்களைப் பதிவு செய்து வருங்காலத் தமிழுலகுக்குத் தரவேண்டும் என்ற தணியாத வேட்கையும் இனிது பெறப்படும். 42 பெரும்புள்ளிகளையும் அவர்தம் செயற்பண்புகளையும் நிரல்படுத்தி ஆவணமாக்கித் தந்துள்ளார் நம் பேராசிரியர் சொக்கலிங்கனார் எனில் அது மிகையன்று. திருநெல்வேலி மாவட்டத்தின் இருநூறு ஆண்டுகால வரலாற்றைப் பேராசிரியர் வடித்துத் தந்துள்ளார் என்றே நான் கருதுகின்றேன். சேக்கிழார் பெரியபுராணம் என்னும் பெருங்காப்பியம் படைக்கப் பயன்படுத்திய களஆய்வுகளை எல்லாம் இவரும் பயன்படுத்திப் பெரும்புள்ளிகளை நமக்கு இனம் காட்டி நம்மையும் அவர்களைப் போல வாழ வழிகாட்டிச் சென்றுள்ளார். பெரும்புள்ளிகள் பற்றிக்கூறும் போதே பேராசிரியர் நாட்டு நடப்புகளையும், வட்டார வழக்குகளையும், நடைமுறைகளையும், மரபு சார்ந்த பண்பாடுகளையும் ஆங்காங்கே பதிவு செய்து போகின்றார். இப்பதிவுகளுள் சிலவற்றை நாம் இங்கே பார்ப்போம்.

இன்றைய இளைஞர்களுக்கு உலகவரலாறு தெரிகிறது; ஆனால் சொந்த ஊர் வரலாறு தெரிவதில்லை. பேராசிரியர் சொக்கலிங்கனாரின் பெரும்புள்ளிகள் என்ற நூலைப் படித்தால் ஊர்வரலாறும் தெரியும்; உலக வரலாறும் தெரியும்; 'தூக்குத்துரை' என்ற தலைப்பிலே வரும் தகவல் ஒரு ஜமீனுடைய வரலாற்றைச் சொல்வதாக அமைகிறது. இது சிங்கம்பட்டி ஜமீனின் 24–வது தலைமுறையாக வந்த 27 வயதான ஜமீன் பெரியசாமித் தேவரைப் பற்றியது. இவருக்குத் திருமணம் ஆகவில்லை. தன் நண்பன் இராமசாமித்தேவர் மதுரைச் சிறைச்சாலையிலிருந்து ஒரு மடல் எழுதுகிறார். தனக்குத் தூக்குத்தண்டனை அடுத்தமாதம். கொலை, கொள்ளை எனக் குற்றம் சாட்டித் தன்னைத் தூக்குப் போடப்போவதாக மடல் எழுதியிருந்தார். ஜமீன்தார் நண்பனைக் காப்பாற்ற மதுரைக்கு வந்து எப்படி இராமசாமித் தேவரைச் சிறைச்சாலையில் இருந்து தப்பிக்க வைத்தார் என்பது பற்றிப் பேராசிரியர் எழுதிப் போகிறார். ஜமீன் வடநாடு போவதாகச் சொல்லி மதுரைக்குப் புறப்பட்டார் தம் குதிரையில். அசல் சேட்டைப் போல்

இருப்பார். அப்போது ஜெயிலராக இருந்தவர் நானாசாகிப். இவருடன் நட்புக் கொண்டு, மதுரைச் சிறைச்சாலை ஊழியர்களுக்கெல்லாம் உதவுவதும் பழகுவதுமாக இருந்து சிலநாள் கழித்து ஜெயிலரை வைகை ஆற்றிற்கு அழைத்துச் சென்று தான் வந்த செயலையும் அவரிடம் கூற, அவர்களுக்குள் வாய்ச்சண்டை முற்றுகிறது. குதிரைச் சேணத்துடன் நானாசாகிபைச் சேர்த்து வைகை ஆற்று மணலில் புதைத்துவிட்டு, இராமசாமித் தேவரைச் சிறையிலிருந்து தப்பிச் செல்லுமாறு சொல்லி ஜமீன் உதவுகிறார். பின் சேணத்தில் சிங்கம்பட்டி ஜமீன் என்ற சமஸ்தான முத்திரையைப் பார்த்து ஜமீன்தாரைக் கைது செய்கின்றனர். நானாசாகிப்பின் மனைவி 'சிங்கம்பட்டி ஜமீனைச் சிங்கம்பட்டியிலேயே பட்டப்பகலிலே ஊர்மக்கள் பார்க்கத் தூக்கிலே போடவேண்டும் என்று திருநெல்வேலிக் கலெக்டரிடம் வேண்டுகோள் கூற, அவ்வாறே தண்டனை நிறைவேற்றப்படுகிறது. ஜமீனுக்கு வாரிசு இல்லாமல் போய்விடக்கூடாது என்று கருதிய ஆங்கில அரசு ஆயுள் தண்டனையாகக் குறைக்கிறது. அப்போது சிங்கம்பட்டி ஜமீன் கலெக்டரிடம் 'உன் மனைவிதான் இப்போது வேண்டும்' என்று கூறத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகிறது. தூக்கிலிடப்பட்ட இடம் 'தூக்கு மரத்து வயல்' என்றும் அவரை 'தூக்குத்துரை' என்றும் மக்கள் இன்றும் போற்றுவதாகச் சொக்கலிங்கனார் சொல்வது ஒரு ஜமீனின் வரலாற்றை எடுத்துரைப்பதாகவே அமைகிறது.

அடுத்து எட்டயபுரம் ஜமீன்பற்றி அமையும் தகவல். எட்டயபுரம் மன்னர்களிடம் தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கம் இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொள்வது. இவர்களே அதிகாரப் பூர்வமான மனைவியர். இதற்கு மேலும் சில மன்னர்கள் மதிப்பிற்குச் சில பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வார்கள். ஆனால் 52 வயது நிரம்பிய ஸ்ரீ ராஜாதிராஜ ராஜா ஜெகவீர முத்துத் தங்க குமாரராம புஷ்ப ராஜ ஜெகவீர எட்டப்ப நாயக்கர் முற்றிலும் மாறுபட்டவராவார். பெயரைப் போலவே இவருடைய மனதும் பெரிதாம். ஐந்தாறு மனைவியருடன் வாழ்ந்து வந்தவர்கள் வழியிலே வந்த இவரோ திருமணமே செய்து கொள்ளவில்லை. பரந்த மனப்பான்மை உடையவராக விளங்கினார். இவரிடம் படைத்தளபதியாக இருந்து ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்தான் அழகுமுத்துக்கோன். எட்டயபுரத்து அரசர் சமய நல்லிணக்கத்தை மிகுதியும் பேணியவர். எட்டயபுரத்து மக்களுடைய நாட்டுப்பற்று வியக்கத்தக்கதாக விளங்கிற்று. மன்னரின் பெயரைக்கூட அவர்கள்

சொல்வதில்லை. ஒன்று, இரண்டு என்று எண்ணிவரும் போது அம்மக்கள் 'எட்டு' (எட்டப்பன்) என்று உச்சரிக்கமாட்டார்களாம். எட்டுக்குப் பதில் 'மகாராஜா' என்றுதான் கூறுவார்களாம். 88 என்பதனை 'எண்பது மகாராஜா' என்றும், 98 என்பதனைத் 'தொண்ணூறு மகாராஜா' என்றும் கூறுவார்களாம். மன்னரிடம் அவ்வளவு மரியாதை, மதிப்பு. மக்கள் "பெத்தப்பன் போனால்தான் என்ன ? எட்டப்பன் இருக்கும்போது" என்பார்களாம். இது எட்டயபுரத்து வரலாறு ஆகும்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்தார் ஆஷ்துரை, அவர் வாஞ்சிநாதனால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு. இந்த வரலாற்றின் பின்னணியைப் பேராசிரியர் சொக்கலிங்கனார் இந்த நூலில் அதன் பின்புலத்துடன் தெளிவுபடுத்தியுள்ளார். இதனால் இவருடைய வரலாற்றுணர்வு நன்கு புலப்படும்.

செங்கோட்டைச் சாவடி சுப்பிரமணியபிள்ளையின் மகன் அருணாசலம் பல லட்சம் பெறுமான தோப்பு, துரவு, வயல்கள், வீடுகள் இவற்றுக்கு ஒரே வாரிசு. ஆனால் அவருக்கு ஒரே ஒரு கவலை இந்தியா அடிமையாகி இருக்கின்றதே என்பதுதான். திருமணம் ஆன அருணாசலம் மருத்துவக் கல்லூரியில் முதலாண்டு படித்துக் கொண்டிருந்தபோது அது நடந்தது. 14.4.1911–ஆம் ஆண்டு சாவடிப்பிள்ளை வீட்டில் ரகசியக் கூட்டம் நடந்தது. நீலகண்ட பிரம்மச்சாரி, செங்கோட்டை வாஞ்சிநாதன், தென்காசி சிதம்பரம், ஒட்டப்பிடாரம் மாடசாமி, புனலூர் ராமசாமி ஆகிய 15 பேர் கூடியிருந்த இரகசியக் கூட்டத்தில் 'சுதேசிகளைக் கொன்று குவித்த ஆஷ்துரையைப் பழிவாங்க வேண்டும்' என்று முடிவு செய்தனர். ஒவ்வொருவரும் தான்தான் செய்ய வேண்டும் எனக் குரல் எழுப்பத் திருவுளச் சீட்டுப்போட்டனர். அதில் வாஞ்சியின் பெயர் வந்தது. அருணாசலத்திற்குத் தன் பெயர் வரவில்லையே என்ற வருத்தம். ஆனாலும் வாஞ்சிக்குத் துணை நிற்பது என்று முடிவு செய்தார். 1911 ஜுன் 17–ஆம் நாள் மணியாச்சி வழியாகப் புகையூர்தியில் வரும் ஆஷ்துரையை வாஞ்சி சுட்டுக்கொன்று விட்டுத் தானும் சுட்டுக்கொள்கிறார். நண்பன் வாஞ்சிக்குத் துணையாக வந்த சாவடி அருணாசலம் தலைமறைவாகிப் பின் கல்கத்தாவில் பிடிபட்டார். அவரை ஆங்கில அரசு கைகால்களைச் சங்கிலியால் கட்டிப் புகை வண்டி இருக்கையில் கால்களுடன் பிணைக்கப்பட்டுச் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டாராம். ஒன்றரை ஆண்டு வழக்கு

நடந்தது. சாவடி அருணாசலம் சிறையில் இருக்கும்போது மலம் கொட்டும் சட்டியில் உணவைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்களாம். இந்தக் கை தானே ரத்தக் கையெழுத்துப் போட்டது என்று ரூல் தடியினால் அடித்து அடித்து அவருடைய கையையே எழுத முடியாதபடி ஒடித்துவிட்டார்களாம். விடுதலையாகிய அருணாசலம் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சில காலம் தமிழாசிரியராக இருந்தாராம். இது வேறு வரலாற்றுச் சுவடிகளில் பதிவு செய்யப்படாத ஒன்று என்பதனை எண்ணும்போது பேராசிரியர்பால் நமக்கு மிகுந்த மதிப்பு ஏற்படுகிறது.

அடுத்த வரலாறு ராஜரிஷியான இராமர் பாண்டியரைப் பற்றியதாகும். இவர் வாழ்ந்த காலம் 18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும். ஆங்கில அரசை நடுநடுங்கச் செய்த பூலித்தேவர் ஆண்ட நெற்கட்டும் செவ்வல் பாளையத்தைப் பற்றியது. பூலித்தேவரின் மகள் ராணி கோமதிமுத்துநாச்சியார் பெண்ணாகவே இருந்து பாளையத்தைக் கட்டிக்காத்து வந்தார். இவருடைய கணவர் இராமர் பாண்டியரோ வேறுபட்ட மனிதராகவே விளங்கினார். மகாராஜா பூலித்தேவரின் மருமகன் தான் என்று பிறர் கூறுவதைக் கூடப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத மனநிலை. அவருடைய ஐந்தாண்டு இல்வாழ்க்கையில் பிறந்த ஆண் குழந்தை சில திங்களே உயிர்வாழ்ந்து இறந்து போயிற்று. இராமர்பாண்டியரோ இதைக் காரணம் காட்டி அவர் அரண்மனையை விட்டு வெளியேறிவிட்டார். பாளையத்தை ஆட்சி செய்ய வேறு ஆள் இல்லை; ராணிக்கோ இது பெருங்கவலையாக உலகப்பற்று அற்ற மனநிலையில் அரண்மனையை விட்டு வெளியேறிய அவர் தத்துவ விசாரணையில் ஈடுபாடு கொண்டார். அவரைத் தேடிப் பல்வேறு திருமடங்களுக்கும் ஆள் அனுப்பித் தேடினார்கள். இந்நிலையில் திருவாவடுதுறையின் 11–வது பட்டம் திருப்பெருந்திரு வேலப்பதேசிகரிடம் ராணியார் ஒரு திருமுக ஓலை அனுப்பினார்கள். நாலைந்து ஆண்டுகளாக நெற்கட்டும் செவ்வல் பூலித்தேவரின் மருமகன் காவியுடை வாங்காத துறவியாக இருக்கிறார் என்பதனை அறிந்து தேசிகர் மிகவும் வியப்புற்றார். இராமர் பாண்டியரை அழைத்து இப்போதே நெற்கட்டும் செவ்வல் சென்று அரண்மனைப் பொறுப்பை ராஜரிஷியாகச் சென்று ஏற்க வேண்டும் என்று ஆணையிட்டார். ஆதீனத்தின் ஆணையை ஏற்றுச் சில ஆண்டுகள் குறைவில்லாமல் அவரும் ஆட்சி செய்து வடக்கிருந்து உயிர் துறப்பதுபோல உயிர் துறந்தாராம். இப்படி ஒரு பாளையத்தின் வரலாற்றைச் சுவையாகச் சொக்கலிங்கனார் சொல்லிப்போகும் பாங்கிலிருந்து நெல்லை மாவட்ட வரலாற்றறிவின்

நீள அகல ஆழங்கள் புலப்படும். பேராசிரியர் சொக்கலிங்கனாரின் வரலாற்றுப் பார்வைக்கு மேற்கண்டவை சில சான்றுகளே ஆகும் எனலாம்.

**தலைப்புகளே தனித்திறன் வாய்ந்தவை**

பேராசிரியர் இதழியல் உத்தியை நன்கு அறிந்தவர் என்பதனை அவருடைய எழுத்தோவியங்களில் மட்டுமன்று, அவற்றின் தலைப்பிலிருந்தும் அறிந்துணர முடிகின்றது. சான்றுக்கு ஒன்றிரண்டைக் காண்போம்.

***"காக்கையைத் தூது அனுப்பிய வெள்ளைக் கோழி"***
***"பட்ட கட்டையில் பகல் குருடு போகுது காண்"***
***"மரமொடு மரமெடுத்தார்"***
***"ஏழுக்குப் பிறகு மகாராஜா"***
***"மீசைமுடியை அடகு வைத்து நடந்த கல்யாணம்"***
***(சிவகங்கை சமஸ்தானம் பற்றியது)***
***"தளபதியின் சாப்பாட்டுக்குப் பசு"***
***(ஞானப்பிரகாசர் பற்றியது)***
***"கைராசிப்பிள்ளையை அழைத்து வாருங்கள்"***
***"பொய்சொல்லா மாணிக்கம்"***
***"பேய்த்துரை"***
(துலைவன் கோட்டை ஜமீன் பற்றியது)

பெரும்புள்ளிகள் நூலில் வரும் பெரியோர்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களின் அடிப்படையில் பின்னப்பட்ட நூல்தான் பெரும்புள்ளிகள் என்றாலும் வாசகர்களைச் சுண்டி இழுத்துப் படிக்க வைக்கும் சுவையான தலைப்புகளும், நிகழ்ச்சிகளும், வருணனைகளும் பேராசிரியரின் ஆழங்கால்பட்ட தமிழ்ப்புலமையை வெளிக்காட்டுவனவாகும்.

**பழக்கவழக்கங்களின் பதிவுகள்**

தமிழகத்தில் முன்பு திருமணமான பெண்கள் தங்கள் கணவருடைய பெயரைச் சொல்வது இல்லை. இப்போதும் மரபில் ஊறிப்போன சில குடும்பங்களில் இந்தப் பழக்க வழக்கத்தினை நாம் காணமுடிகிறது. இன்றைய அறிவியல் வளர்ச்சியில் இந்தப் பழக்கவழக்கங்கள் மறைந்து வருவதனையும் காண்கின்றோம். "எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு" அல்லவா! கணவன் பெயரை மனைவியும், மனைவி பெயரைக் கணவனும் இணைத்துக் கொள்வதனைக் கூட அரிதாகக் காண முடிகின்றது. இளமுருகு

பொற்செல்வி, திருமதி பொற்செல்வி இளமுருகு என்பதே சான்று. அன்றே கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைக்கும் போது தன் கணவன் கோவலன் பெயரைக் கூறியதாக "கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி" இளங்கோவடிகள் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் எட்டயபுரத்து மன்னரின் பெயரை மட்டுமன்று 'எட்டு' என்பதைக் கூட அந்தப் பாளையப்பட்டில் வாழ்ந்த மக்கள் சொல்லமாட்டார்களாம். நெல்லை அளந்துபோடும் போது ஏழு என்பதற்கு அடுத்து 'எட்டு' என்ற எண்ணைக் கூறாமல் 'மகாராஜா' என்று கூறுவார்களாம்.

திருவிதாங்கூர் மன்னரிடம், 'அரசரை நேரில் காலையிலேயே பார்க்க எண்ணியிருந்தேன்' என்று கூற வந்த பேரா. சுந்தரம்பிள்ளை 'திருமேனியிடமிருந்து அழைப்பு வந்தது' (ப.185) என்று கூறுவார். திருவிதாங்கூர் மன்னரை அழைக்கும் முறை "திருமேனி" என்பது ஒரு பழக்கமாக இருந்து வந்துள்ளமை கண்கூடு.

> "குப்பைக் கோழித் தனிப்போர் போல...
> விளிவாங்கு விளியி னல்லது
> களைவோர் இலையா லுற்ற நோயே" (குறுந். 305)

என்பது குறுந்தொகை. இப்படிச் சேவல் சண்டை நடைபெறுவதனை இன்றும் காண்கிறோம். கத்தி கட்டாமல் சேவல்களை மட்டும் மோதவிட்டுப் பார்ப்பதற்கு 'வெப்போர்' (ப.93) என்று கூறுவார்களாம். இதில் சேத்தூர் ஜமீன் சேவுகபாண்டியருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாம்; இதனால் இவருக்குக் கோழித்துரை என்றபெயருண்டு. இப்படி பழக்கவழக்கங்களையும், மரபுகளையும் தவறாமல் பேராசிரியர் பதிவு செய்துள்ளார்.

**பேராசிரியரின் புலமை வீச்சு**

பேராசிரியர் தி.அ.சொக்கலிங்கனார் 'பச்சையப்பன் கல்லூரிப் படிக்கட்டும் பைந்தமிழ் பாடும்; இந்துக் கல்லூரியின் இடிந்த சுவரும் இன்கவிபாடும் என்று சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளையால் புகழப் பெற்று இந்துக் கல்லூரியில் பயின்றவர். அண்ணாமலையில் அருந்தமிழ் ஆனர்சை முடித்தவர். சொல்லின் செல்வரிடம் 'தமிழகம் ஊரும் பேரும் பத்தாம்நூற்றாண்டுவரை' என்னும் தலைப்பில் எம்.லிட்., ஆய்வை மேற்கொண்டவர் இப்படிப்பட்ட இலக்கிய அடித்தளம் அமையப்பெற்றஅருந்தமிழ்ப் பேராசிரியரின் புலமை வளத்திற்குக் குறைவே இருக்காது. சான்றுக்குச் சில காண்போம்.

பேராசிரியர் வெள்ளைவாரணனாரின் நல்ல உள்ளத்தைக் கூறும்போது "இப்படி முட்செடியில் ரோஜாப் பூவை மாத்திரமே பார்த்து ஆனந்தப்படக்கூடிய அந்தப் பேராசிரியரை உங்களுக்குத் தெரியுமா? (ப.32) என்று உவமைகூறி அறிமுகம் செய்வார் தி.அ.சொ.

அண்ணாமலையில் கணித ஆசிரியராக இருந்த டாக்டர் எஸ்.எஸ்.பிள்ளையைப் பற்றிக் கூறும்போது பேராசிரியர் சொக்கலிங்கனார் "இவரை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது புயலைப் பெட்டிக்குள் அடைப்பது போல" (ப.83) என்பார்.

"குஞ்சைக் காக்கும் கோழியைப் போல மாணவர்களைத் தாயாகத் தாங்கியும் கருணையோடு கண்டித்தும் தமக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்துக் கொண்டவர் (ப.146) என்று பேராசிரியர் அலெக்சாந்தர் ஞானமுத்துவைக் (1932–1957) கூறுவார். இவ்வாறு நம் மனத்தில் பதியும் தன்மை கொண்ட உவமைகளால் இவர் நம்மை வியப்பில் ஆழ்த்துவார்.

பேராசிரியர் தி.அ.சொ. புலவர்களின் சிலேடை நயங்களையும் ஆங்காங்கே பதிவு செய்து நமக்கு இலக்கிய இன்பத்தை வாரி வழங்கியுள்ளார்.

மாம்பழக்கவிச்சிங்கம் என்பாருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்க வேண்டும் என்று இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதிக்கு நெடுநாளைய விருப்பம். புலவர்களின் இசைவுடன் கவிச்சிங்கத்திற்கு 'நாவலர்' பட்டம் வழங்க ஏற்பாடாயிற்று. பார்வை இழந்தவர்களை மன்னர் பார்க்கக்கூடாது என்று அங்கே ஒரு மரபு இருந்ததாம். அம்மரபை மீறி மாம்பழக்கவிச்சிங்கத்தை மன்னர் அழைத்தார்; அழைத்துத் தாம்பாளத்தில் பழங்கள், பொற்காசுகள் விருது, பொன்னாடை இவற்றைக் கொடுத்துச் சிறப்பித்தார். புலவருடன் அவர் மகள்

நடக்காது' என்றார். இதைக்கேட்ட முத்தையாபாண்டியனுக்கு அதிர்ச்சி! புலவரை சிபாரிசுக்கு அழைத்து வந்தது தப்பாப் போச்சே என மனக்கலக்கத்துடன் இருக்கும் நேரத்தில் மன்னர், "புலவரே! இவருக்கு அரிசியும் ஆடும் வேண்டும் என்பதை என்ன அழகாகச் சொல்லிவிட்டீர்! ஆடு நடக்கும்! அரிசி நடக்காது. அழகு! அழகு! உமது தமிழே அழகு!" என்றாராம். மேலும் ஊத்துமலை மன்னர் 'தலைச்சுமையாக அரிசியைக் கொண்டு செல்லுங்கள்' என்று தன் பணியாளன் ஒருவனுக்கு ஆணை இட்டுவிட்டுச் சென்னிகுளத்தாரைப் பார்த்து 'நமது சமஸ்தானத்தில் நடக்காததும் நடக்கும்' என்றாராம்.

அடுத்த இதழில் தொடரும்....

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**
**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**
**மதுரை–625001.**

தொலைபேசி : 0452-6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : [redacted]

RNI Regd. No.: 5508/56 June 2009


## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,

Printed by **V.Govindarajan**, published by **R.ALAGUMALAI** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers 32, West Masi Street, Madurai-1**, and published at **54, Tamilsangam road, Madurai.** Editor **R. ALAGUMALAI**